விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 23 வெள்ளிக்கிழமை (07.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 078

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## ஆசிரியர்களுடன் சென்ற பஸ் கடைத் தொகுதியுடன் மோதி விபத்து

26 பேர் காயம்; பளையில் பயங்கரம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து ஆசிரியர்களை ஏற்றிக்கொண்டு கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சொந்தமான பேருந்து பளைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து கட்டடம் ஒன்றுடன் மோதி விபத்திற்குள்ளானதில் 26 பேர் காயமடைந்ததாக பளை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர் ஒருவர் மஞ்சள் கோட்டுக் கடவை ஊடாக வீதியை கடப்பதற்கு முற்பட்ட போது, பேருந்துச் சாரதி நிலை குலைந்த நிலையில் அங்கிருந்த புடைவை மற்றும தேநீர் கடைகளுடன்

19 ஆம் பக்கம் பார்க்க..

## பளை விபத்தை கண்டித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தினை அடுத்து பளை மத்திய கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் சிலரின் மீது படையினர் தாக்குதல் நடத்தியதையடுத்தே இந்த பதற்றமான சூழ்நிலை நிலவியதாக கூறப்படுகிறது.

யாழிலிருந்து கிளிநொச்சிக்கு ஆசிரியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து, பளைப்பகுதியில் திடீரென மஞ்சள் கடவை பகுதி வழியாக மாணவன் வீதியினைக் கடக்க முற்பட்ட போது, நிலை தடுமாறிய சாரதி பேருந்தினை அருகிலிருந்த வியாபார நிலையங்களுக்குள் புகுத்தியமையால்

19 ஆம் பக்கம் பார்க்க..

## பொருளாதாரத் தடை சாத்தியமில்லை!

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளில் இலங்கைக்கு ஆதரவான சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் இருப்பதால் ஐ.நா மனித உரிமை ஆணைக் குழுவினால் இலங்கைக்கு எதிராக பொருளாதார தடைகளை கொண்டு வர முடியாது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க..

# சர்வதேச விசாரணைக்கு நவநீதம்பிள்ளை அழைப்பு

அமைச்சர் பீரிஸிடம் நேரில் தெரிவிப்பு




இலங்கை போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று அமைச்சர் பீரிஸை சந்தித்து பேசும் போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க...)

## இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி உறுதிளித்தது இந்திய அரசு!



(புதுடெல்லி)

இலங்கை இராணுவத்திற்கு இந்திய இராணுவம் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர மேனன் உறுதி அளித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, மாலைத்தீவு ஆகிய 3 நாடுகள் இடையேயான கடல் வழி பாதுகாப்பு தொடர்பான மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்

19 ஆம் பக்கம் பார்க்க..

## சர்வதேச விசாரணைக்கு பிரித்தானிய அரசும் ஆதரவு

(லண்டன்)


இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பிரித்தானியா தொடர்ந்தும் இருந்து வருவதாகவும் இந்த செய்தி ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தப்படும் எனவும் பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படவில்லை என்பதால், ஜெனிவாவில் அமெரிக்க முன்வைத்துள்ள வரைவு

19 ஆம் பக்கம் பார்க்க..

## மனைவியை கொலை செய்த கணவனுக்கு மரண தண்டனை

யாழ். மேல் நீதிமன்றம் தீர்ப்பு



(யாழ்ப்பாணம்)

ஒன்பது மாத கர்ப்பிணியான தனது மனைவியை கழுத்தை நெரித்துக் கொலை செய்த கணவனுக்கு யாழ். மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதியன்று நாவற்குழியினைச் சேர்ந்த அமிர்தலிங்கம் சுயா என்ற 9 மாத கர்ப்பிணிப் பெண் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலையின் சந்தேகத்தின் பேரில் உயிரிழந்த பெண்ணின் கணவனான ரவீந்திரன் சுரேஸ் என்பவர் சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தார்.

சாவகச்சேரி நீதிமன்றில் இது தொடர்பில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில்

20 ஆம் பக்கம் பார்க்க..

## பீரிஸ் உரைக்கு வரவேற்பில்லை

(ஜெனிவா)

ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆற்றிய உரை தொடர்பில் ஏனைய உறுப்பு நாடுகள் போதிய அக்கறை காட்டவில்லை எனத் தெரியவருகிறது.

அவர் உரையாற்றி முடித்த

19 ஆம் பக்கம் பார்க்க..

## சரணடைந்த பின்னர்தான் புலிகளின் தலைவர்கள் படுகொலை

புதிய ஆதாரம் வெளியானது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்கள் பலர் சரணடைந்த பின்னர் இலங்கை ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான புதிய ஆதாரங்கள் வெளியாகி உள்ளன.

இலங்கை இறுதிப் போரில் புலிகள் அரசியல் பிரிவு தலைவர் நடேசன், சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன், கேணல் ரமேஷ் உள்ளிட்டோர் ராணுவத்திடம் சரண் அடைந்துள்ளனர். அவர்கள் அனைவரையும் இலங்கை இராணுவத்தினர் சித்திரவதை செய்து பின்னர் சுட்டுக் கொன்றுள்ளனர். இது தொடர்பாக புதிய ஆதாரங்களை அவுஸ்திரேலியாவில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ளது.

இறுதிப் போரின் போது பிரபாகரனின் பாதுகாப்பு படையை சேர்ந்த போராளி ஒருவரும் ஆசிரியர் ஒருவரும் இது தொடர்

19 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மகிந்தவுக்கு கை கொடுத்த இந்தியப் பிரதமர் தேவைதானா?

## தமிழக முதல்வர் கேள்வி

(சென்னை)

இந்திய மீனவர்களைச் சிறைபிடிப்பதை நிறுத்துங்கள் என்று கண்டிப்புடன் சொல்வதை விட்டுவிட்டு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கை குலுக்கும் பிரதமர் தேவையா என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.



நாகபட்டினத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே தமிழக முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

பிறரை வாழ வைப்பவர்கள் தமிழர்கள். வாழ வைத்த தமிழர்களை வஞ்சித்த அரசு, மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. மத்திய காங்கிரஸ் அரசின் வஞ்சகச் செயல்களுக்கு உறுதுணையாக இருந்தது தி.மு.க. இந்தப் பகுதி மீனவர்கள் மற்றும் மீன்பிடித் தொழில் நிறைந்த பகுதி. ஆனால் இந்தத் தொழிலில் எத்தகைய இடையூறுகளை, இன்னல்களை நீங்கள் எதிர்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன்.

இலங்கை கடற்படையினரின் அச்சுறுத்தல்களுக்கும், கொடுமைகளுக்கும், சிறைபிடிப்புகளுக்கும் நீங்கள் அடிக்கடி ஆட்படுத்தப்படுகிறீர்கள். இவை நிகழும்போதெல்லாம் உடனடியாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் மூலமும், தூதரக நடவடிக்கைகள் மூலமும், தமிழக மீனவர்கள் விடுவிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை நான் எடுத்து வருகிறேன்.

தமிழ்நாட்டு மீனவர்கள் இந்திய குடிமக்கள்தான். எங்கள் இந்திய மீனவர்களை விடுதலை செய்யுங்கள்! எங்கள் இந்திய மீனவர்களை சிறைபிடிப்பதை நிறுத்துங்கள் என்று கண்டிப்புடன் சொல்வதை விட்டுவிட்டு இலங்கை ஜனாதிபதியுடன் கை குலுக்குகிறார் பாரதப் பிரதமர்.

இப்படிப்பட்ட பிரதமர் தேவைதானா? இப்படிப்பட்ட காங்கிரஸ் ஆட்சி தேவைதானா? தூக்கி எறிய வேண்டாமா? தூக்கி எறிய வேண்டும்.

இலங்கை இனப் போரின் போது போர்க் குற்றங்கள் செய்த இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு தீர்மானம் கொண்டு வர அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட ஐந்து நாடுகள் முன் வந்துள்ளன.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிய வேண்டிய தார்மீகப் பொறுப்புள்ள இந்தியா, பிற நாடுகளால் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்தை முன்மொழிய முன் வரவில்லை.

இப்படிப்பட்ட காங்கிரஸ் அரசு நமக்கு தேவைதானா? இந்த தமிழின விரோத மத்திய காங்கிரஸ் அரசை நீங்கள் இந்தத் தேர்தலில் தூக்கி எறிய வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக் கொள்கிறேன் என்றார். (எ-11)


கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணசபை
செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

**ஏலவிற்பனை**

எமது கல்வி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கல்வி அமைச்சு வளாகத்தில் எதிர்வரும் 12.03.2014 புதன் கிழமை காலை 11 மணிக்கு ஏலவிற்பனை செய்யப்படும்.

பொருட்களின் விபரம்:

01. பயன்படுத்தப்பட்ட வாகன ரயர்கள் மற்றும் றிம்கள்
02. பயன்படுத்தப்பட்ட கணனிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள்
03. பயன்படுத்தப்பட்ட வாகன உதிரிப்பாகம் மற்றும் பற்றறிகள்

சி.சத்தியசீலன்,
செயலாளர். (சி-6683)



**அறிவித்தல்**

நடராஜா ராஜதேவன் (யாழ்.மாநகரசபை உறுப்பினர்) ஆகிய நான் யாழ்பாடி விடுதியின் முகாமையாளர் பதவியில் இருந்து 01.02.2014 முதல் விலகிக் கொண்டுள்ளேன் என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

என்.இராஜதேவன்
யாழ்.மாநகரசபை உறுப்பினர்
(சி-6687)



**ஈர விழிகளுடன் ஈராண்டில்**

மண்ணகம் மகிழ 15 . 11 . 1971



மண்ணகம் நெகிழ 28 . 02 . 2012

திருமதி **மதிமோகன் லீலா**

இல்லற வாழ்வில் இனிதே
இகமதில் வாழ்ந்து
இறையடி எய்தினள்
இல்லத்தவர்க்கு பெரும் துயர் தந்து

(5768)

ஆவரம்பிட்டி,
கொற்றாவத்தை.

குடும்பத்தினர்


# ஐந்து மாணவர்கள் படுகொலை சந்தேக நபர் மூவருக்கு பிடியாணை

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐந்து பேர் படுகொலை செய்யப்பட்டது சம்பந்தமான வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட பன்னிரண்டு சந்தேக நபர்களில் மூன்று பேருக்கு எதிராக தற்போது நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

திருகோணமலை பிரதான நீதவான் ஈ. சரவணராஜா முன்னிலையில், வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, முதலாம், ஏழாம் மற்றும் 13வது சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால், அவர்களுக்கு பிடிவிறாந்தை பிறப்பிக்குமாறு பாதிக்கப்பட்ட தரப்பின் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, நீதவானிடம் கோரிக்கை விடுத்தார்.

சந்தேக நபர்கள் பயணம் செய்த வாகனத்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக அவர்கள் உரிய நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக முடியாது போனதாக அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கூறினார்.

2006ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திருகோணமலை நகரில் காந்திசிலைக்கு அருகாமையில், பல்கலைக்கழகத்தில் சேர அனுமதி கிடைத்திருந்த மாணவர்கள் உட்பட ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை வரையில் பேசப்பட்டு வருகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸ் குற்றப்புலனாய்வு துறையினரால் சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த 12 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் ஏற்கெனவே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது 12 சந்தேக நபர்களில் 9 பேர் மட்டுமே ஆஜரான நிலையில், ஆஜராக தவறிய மூவரையும் கைது செய்வதற்கான பிடியாணையை நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இந்நபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்கான உத்தரவை பிறப்பித்த நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி. சரவணராஜா, எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி வரை விசாரணைகளை ஒத்திவைத்துள்ளார்.

அன்றைய தினம் நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு 32 சாட்சிகளுக்கும் அழைப்பாணை அனுப்புமாறு மற்றுமோர் உத்தரவையும் நீதிமன்ற பதிவாளருக்கு நீதவான் பிறப்பித்துள்ளார். (எ-11)

# ஆப்கான் ஜனாதிபதி கர்சாய் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை தொடர்பில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி இதன்போது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளின் தலைவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் இணைந்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அத்துடன் இரண்டு நாடுகளும் பொதுவான கலாசார பாரம்பரியத்தை கொண்டுள்ளதுடன் வலுவான நட்பு மற்றும் புரிதல்களை கொண்டுள்ளன.

உங்களது இலங்கை விஜயம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்த மேலும் பங்களிப்பை வழங்கும் என்றார்.

அதேவேளை இந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கைக்கும் - ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் மேலும் ஒத்துழைப்புகளை வழங்கும் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன. (எ-11)

# குடும்பப் பெண் தூக்கில் கணவன் தற்கொலை முயற்சி

## இணுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பகுதியில் 18 வயதேயான இளம்குடும்பப் பெண்ணொருவரின் சடலத்தை தூக்கில் தொங்கிய நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதேவேளை குறித்த பெண்ணின் கணவர் தற்கொலைக்கு முயற்சி செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இணுவில் காரைக்கால் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்தே நேற்று மாலை குறித்த இளம்குடும்ப பெண்ணின் சடலத்தை கோப்பாய் பொலிஸார் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண் வசீகரன் திலகா(வயது-18) என விசாரணைகள் மூலம் அறியப்பட்டுள்ளதாகவும்,

இதே வேளை குறித்த பெண்ணை அவரது கணவர் கொலை செய்து விட்டு தானும் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள உயிரிழந்த பெண்ணின் கணவர் பொலிஸாரின் காவலிலுள்ளதாகவும், தாம் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)


**கடை செற் விற்பனைக்கு**

நகர்த்தும் வசதி கொண்ட கடை செற் கொக்குவில் பகுதியில் உடன் விற்பனைக்குண்டு. 37,000/=

தொடர்பு: 0778435224


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## காலம் உயிர் போன்றது

காலம் பொன் போன்றது என்று பொதுவாக எல்லோரும் சொல்கிறார்கள். அது பொருத்தமாகத் தெரியவில்லை என்றார் ஒருத்தர். தங்கத்தைப் போல காலமும் மதிப்பானது என்ற அர்த்தத்திலே அதைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், பொன் போனால் திரும்ப வசதி வந்ததும் வாங்கிவிடலாம். ஆனால் காலம் போய்விட்டால் திரும்ப வராதே. அப்போது காலம் உயிர் போன்றது என்று சொன்னால் தானே சரியாக இருக்கும் என்றார். நல்ல சிந்தனைதான்.

காலத்தினுடைய அருமையை நினைக்க வேண்டும். ஒரு காரியம் செய்ய வேண்டும் என்று நினைத்தால் உடனே செயலில் இறங்க வேண்டும். பின்னர் செய்யலாம் என்று ஒத்திப் போட்டால் வேகம் குறைந்து விடும்.

போனகிராப் கருவியைக் கண்டுபிடித்தார் தோமஸ் அல்வா எடிசன். திடீரென்று தோன்றிய யோசனையால் ஒரு மணி நேரத்தில் இதைக் கண்டுபிடித்தார். தந்தியோடு செய்திக் குறியீடுகளை பதித்து வைக்க ஒரு கருவியை ஏற்கனவே அவர் கண்டு பிடித்திருந்தார். அந்தக் கருவிக்குப் பக்கத்திலே நின்று ஒரு நாள் நண்பரோடு பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவருடைய உதட்டிலிருந்து வெளிப்பட்ட ஒலி காரணமாக அந்தக் கருவியில் இருந்த ஊசி அசைந்தது. அந்த ஊசி எடிசனுடைய விரலில் குத்தியது. மனிதக் குரலால் ஏற்படுகிற அதிர்வு ஊசியை அசைக்கிற அளவுக்கு சக்தியுடைது என்றால் மனிதக் குரலையே அந்த ஊசியைக் கொண்டு பதிவு செய்து வைக்க முடியுமா? அதே ஊசியால் மீண்டும் அதை கேட்க முடியுமா என்று யோசித்தார்.

சரி, பின்னர் பார்த்துக்கொள்ளலாம். சாப்பாட்டு நேரம் வந்ததென்று அவர் நினைத்திருந்தால் என்னவாகும்? அந்த உணர்வினுடைய பாதிப்பு மாறிப்போயிருக்கும்.

அதனால் உடனே செயலில் இறங்கினார். ஒரு மணி நேரத்தில் 'போனகிராப்' உருவாகியது. அதில் 'மேரி ஹேட் எலிட்டில் லாம்ப்' என்று பாடினார். நாளைக்குப் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்திருந்தால் இந்தப் பெருமை அவருக்குக் கிடைத்திருக்குமா?

ஹெச்.ஜி.வெல்ஸ் என்ற எழுத்தாளர் புகழினுடைய உச்சிக்கே சென்றார். இதற்குக் காரணம், அவருக்குள்ளே எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்த 'Do it now' என்கிற ( இப்போதே செய்) மந்திரம்தான்.

ஹெச்.ஜி.வெல்சுக்கு புது யோசனை ஏதாவது தோன்றினால் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்று அதை அவர் தள்ளிப்போட்டதே கிடையாது. தொடர்ச்சியாக எழுதி முடித்துவிட்டுத்தான் தூங்குவார். இரவு தூக்கத்திற்கிடையில் ஏதாவது யோசனை வந்து விழித்துக் கொண்டாலும் உடனே எழுந்து உட்கார்ந்து விடுவார். வெளியே போகும் போது ஏதாவது புது யோசனை வந்தாலும், அதைக் குறித்து வைத்திருந்து, வீட்டுக்கு வந்ததும் எழுத ஆரம்பித்து விடுவார்.

நெப்போலியன் பத்து மணிக்கு ஒருவரை விருந்திற்கு அழைத்திருந்தால், அவர் பத்து மணிக்கே விருந்தில் இருந்தாக வேண்டும். 15 நிமிடம் தாமதமாக வந்தால், அவருக்கு சொறி சொல்லக்கூட நெப்போலியன் அங்கே இருக்க மாட்டார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தன்னைச் சந்திக்க வருகிறவர்களின் கையைக் குலுக்கிக் கொண்டே சிரித்தபடி, "வந்த வேலையை விரைவாக சொல்லுங்கள் பார்ப்போம்" என்று சொல்வார்.

தாமதத்தால் பல காரியங்கள் தடைப்பட்டுப் போனது.

ஒரு புகையிரதம், புகையிரத நிலையத்திற்கு சரியாக வரவேண்டிய நேரமான 6.30 மணிக்கு வந்து நின்றது. பயணிகளுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம். சில பேர் ஓடிப்போய் சாரதியை பாராட்டி கை குலுக்கினார்கள்.

சாரதி சொன்னார், "அவசரப்படாதீர்கள்! இது நேற்று இதே நேரத்தில் வர வேண்டிய புகையிரதம்" என்றார்.

இளசை சுந்தரம்

# திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழியை பாதுகாக்க நடவடிக்கைகள் முன்னெடுப்பு

மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியைத் தோண்டுவது தற்காலிகமாக நிறுத்தி அங்கிருந்து எடுக்கப்பட்டுள்ள மனித எச்சங்களை ஆய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் புதைகுழியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்

மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்னம் தலைமையில் நடைபெற்ற தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், பொலிஸார், சட்ட வைத்திய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதைகுழியைத் தோண்டுவதைத தற்காலிகமாக நிறுத்துவது என்று நேற்று முன்தினம் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதேநேரம், இந்தப் புதைகுழியைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

அத்துடன், இந்தப் பகுதியில் மக்கள் குடியிருந்தார்களா?, கட்டடங்கள் அமைக்கப்பட்டிருந்தனவா?, தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பகுதியில் முகாம்களை அமைத்திருந்தார்களா? என்றும் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றார்கள் என்று அவர் கூறினார்.

இந்த மனிதப் புதைகுழியிலிருந்து 84 பேருடைய மனித எலும்புக் கூடுகள் இதுவரையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எலும்புக்கூடுகளு க்குரியவர்கள் எவ்வாறு உயிரிழந்தார்கள் என்பதைக் கண்டறிவதற்காக புராதன மனித எச்சங்களைப் பரிசோதனை செய்யும் வைத்திய பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இது தொடர்பான புலன் விசாரணைகளும் தொடர்ந்து நடைபெறுகின்றன என்றும் அவர் கூறினார்.

அதேநேரம் இந்தப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் முறையற்ற வகையில் புதைக்கப்பட்டிருந்தார்கள் என்று வைத்திய பரிசோதனையில் தெரியவந்தாலும், புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தினர் இந்தப் பகுதியில் மயானமொன்று இருந்திருக்கவில்லை என தெரிவித்தாலும், இது தொடர்பில் தீவிரமாக மேல் விசாரணைகள் நடத்தப்படுவது பற்றி நீதிமன்றம் தீர்மானிக்கும் என்றார்.

இந்த மனித புதைகுழி தொடர்பில் அநுராதபுரம் சட்ட வைத்திய அதிகாரி டி.எல்.வைத்தியரத்ன கூறுகையில், மன்னார் மனித புதைகுழியைத் தோண்டும் பணிகள் முடிவுக்கு வந்துள்ளது என்றார்.

அடிமட்டம் வரையிலான படைகளாக மண் எல்லாவற்றையும் தோண்டி முடித்திருக்கின்றோம். இதற்குக் கீழ் தோண்ட வேண்டிய தேவைஇல்லை. ஆனால், இறந்தவர்களைப புதைக்கும் வகையில், 3 சடலங்கள் தனித்தனியா கப் புதைக்கப்பட்டிருக்கின்றன. இந்த எலும்புக்கூடுகள் இந்த மனிதப் புதைகுழியுடன் சம்பந்தப்பட்டவையல்ல.

அவற்றை எதுவும் செய்யவும் இல்லை. இப்போதைய நிலையில், அதற்கான அவசியம் இல்லை. தேவை ஏற்படும் பட்சத்தில் அவற்றைப் பரிசோதனை செய்வதற்கு வசதியாக அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றோம் என்றார்.

அந்தக் குழியில் இருந்து எடுக்கப்பட்டிருப்பவற்றை ஆய்வு கூடத்தில் வைத்து, பால்நிலை, இறந்தவர்களின் வயது, மரணம் எப்படி நேர்ந்தது என்பவை பற்றியெல்லாம் ஆய்வு செய்ய வேண்டி இருக்கின்றது.

எனவே, அடுத்த கட்ட நடவடிக்கையாக என்ன செய்ய வேண்டும், ஆய் வுக்காக இவற்றை எந்த நாட்டுக்கு அனுப்புவது, அதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும், அதில் சுகாதார திணைக்களத்திற்குரிய பொறுப்பு என்ன என்பது பற்றியெல்லாம் நாங்கள் ஆராய் ந்திருக்கின்றோம் என்று சட்ட வைத தியஅதிகாரி மேலும் கூறினார். (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 20 | 30 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 50 | 80 |
| தக்காளி | 20 | 20 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 25 | 40 |
| கரட் | 70 | 70 | 80 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 60 | 45 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 50 |
| பயற்றங்காய் | 100 | 150 | 80 |
| லீக்ஸ் | 50 | 70 | 80 |
| பீற்றூட் | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 |
| போஞ்சி | 60 | 60 | 80 |
| கத்தரிதம்புள்ள | 15 | 25 | - |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 80 | 60 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 |
| இராசவள்ளி | 90 | 80 | 100 |

# இராசி பலன்

07.03.2014
(மாசி 23, வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
சஷ்டி முற்பகல் 9.19 மணிவரை
கார்த்திகை முன்னிரவு 7.50 மணிவரை
இராகுகாலம் 10.55-12.25 மணிவரை
சுபநேரம் 6.25-7.55 மணிவரை
கார்த்திகை விரதம்

**மேடம்** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், பெரிய மனிதர்களின் உதவிகள், ஒத்தாசைகள் என்பன கிடைக்கலாம்.

**இடபம்** விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தையுண்டு, தேகநலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆறுமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள், எடுத்த செயலை முடிக்க ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அலைய நேரிடலாம்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உங்கள் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுப தகவல்கள் வந்து சேரும் நாள்.

**கன்னி** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு, தேவையற்ற அச்சங்களைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, மறதியால் சில பணிகளை செய்யாமல் விட்டுவிடுவீர்கள், செலவுகள் அதிகமாகும், சஞ்சலங்கள் கூடும்.

**விருச்சிகம்** வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், நண்பர்கள், உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சியுண்டு.

**தனுசு** கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், வியாபார விரோதம் விலகும், போசன சுகமுண்டு.

**மகரம்** எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், போட்டியாக செயற்பட்ட சிலர் மனம்மாறுவர், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சில விவாதங்கள் ஏற்படலாம்.

**கும்பம்** புதிய தகவல்கள் நாடி வரும் நாள், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, நீங்கள் தேடிச் செல்ல நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடிவரலாம், நண்பர்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்வர்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தொழிலில் எதிர்பார்த்த சில திருப்பங்களைக் காணலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் பொலிசார் நான்கு பேருக்கு தற்காலிக பணி நீக்கம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 4 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீநிக சஞ்சீவ ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய கைதியொருவரை கடந்த திங்கட்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காகக் கொண்டு சென்றபோது, அக்கைதி தப்பியோடியிருந்தார்.

குறித்த கைதியினை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக கொண்டு சென்ற நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களும், தமது கடமையினைச் சீராக மேற்கொள்ளாத காரணத்தினால் அவர்களைத் தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்குமாறு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொகான் டயஸ் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதற்கமைய குறித்த நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் தற்போது பணியிலிருந்து நீக்குவதாகவும், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட பின்னர் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என அவர் தெரிவித்தார். (2-4)




# மீள்குடியேற்ற பிரச்சினைகளுக்கு இரு வாரங்களுக்குள் தீர்வு கிட்டும்

## மேலதிக செயலாளர் நைமுதீன் நம்பிக்கை

**யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கான தீர்வு இரு வாரங்களுக்குள் காணப்படுமென மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் மௌலவி நைமுதீன் தெரிவித்துள்ளார்.**

மீள்குடியேற்ற விபரம் திரட்டுவதற்கான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் மாவட்ட செயலகத்தில நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தக்கலந்துரையாடல் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மற்றும் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய மக்களின் விபரங்களை தற்போது திரட்டி வருகிறோம். மேலும், விடுபட்டுள்ள மீள்குடியேற்றம் விடயங்களை இணைத்துக் கொள்வது தொடர்பிலும் ஆராயப்பட்டது. யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலக பிரிவிலுமுள்ள விபரங்கள் திரட்டப்பட்டு, அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினர்களுடனும் ஆராயப்பட்டது. இதில் மீள்குடியேற்றத்தில் பிரச்சினைகளின்றி எவ்வகையில் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமென்பதை விரிவாக ஆராய்ந்துள்ளோம்.

அதனடிப்படையில் இன்னும் இரண்டு வாரங்களில் திரட்டப்பட்ட இந்த தகவல்களை மீளாய்வு செய்து அதிகாரபூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடிவுகள் எடுப்பதற்கான தளமாக இக்கலந்துரையாடல் அமைந்ததுள்ளது.

இதேவேளை, வலி. வடக்கு பிரதேசங்களில் விரைவில் மீள்குடியேற்றம் நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளிவருவதாகவும் அங்கு மீள்குடியேற்றம் செய்யப்படுமா எனவும் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர், அனைத்து பகுதிகளிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருகின்றது. பாதுகாப்பு படையினரிடமிருந்த இடங்களை தொடர்ச்சியாக மீள்குடியேற்றத்திற்காக விடுவித்துக் கொண்டிருக்கின்றனர். இனனும் அதிகமாக இடங்கள் விடுவிக்கப்படலாமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-6)




# பெண்கள் உரிமைகளும் மனிதவுரிமைகளே

## மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் பெண்கள் உரிமைகளும் மனித உரிமைகளே மகளிர் தின நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையில் பெண்மை பிணியியல் மருத்துவர் டாக்டர் பவானி ஞானச்சந்திரமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் காலை நிகழ்வுகள் 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இதன்போதே மகளிர் தின ஊர் வலம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பித்து யாழ் இந்து மகளிர் கல்லூரி வரை நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து மைதான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் 2 மணிக்கு ஆரம்பமாகும். இதன்போது நடன நிகழ்வுகள் இடம் பெறும். (2)

# மாணவர்களை பாதிப்புக்குள்ளாக்கும் நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை

(மானிப்பாய்)

மாணவர்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் இயங்கி வரும் தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் இணையத்தள பாவனை நிலையங்கள் என்பன வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களினால் இனங்காணப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களில் மாணவர்கள் வசதியாக அமர்வதற்கேற்ற வாங்குகள் காணப்படவில்லையெனவும் இணையத்தள நிலையங்கள் மாணவர்களை தவறாக வழி நடத்துவதாகவும் கிடைத்த முறைப்பாட்டையடுத்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடவடிக்கையினை மேற்கொண்ட போது நிலையங்கள் இனங்காணப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டுள்ளன.

தனியார் கல்வி நிலையங்களில் வாங்குகள் 8 சென்றிமீற்றரிலும் குறைந்த அகலமுள்ள பிறவெட்டு பலகைகளினால் ஆக்கப்பட்டிருந்தமை இதன் போது கண்டறியப்பட்டது.

இதன் காரணமாக மாணவர்களிற்கு பல உடல் ரீதியான தாக்கங்கள் ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டதோடு அவையனைத்தும் விரைவில் சீர் செய்யப்பட்டு மாணவர்கள் வசதியாகவிருந்து கற்கும் நிலை ஏற்படுத்தப்படல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டது.

இணையத்தள பாவனை நிலையங்கள் மாணவர்கள் தவறாக நடக்க தூண்டப்பட்டமை ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டமையினைத் தொடர்ந்து பகுதிகளாக அடைக்கப்பட்ட இடங்களில் இணையப் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டதுடன் திறந்த இடங்களில் அனைவரது கண்களுக்கும் தென்படும் படியாக கண னிகள் அனைத்தும் வைக்கப்படல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டதுடன் இவற்றை மீறும் கடை உரிமையாளர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கையெடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

மானிப்பாய், சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு, இளவாலை, மாதகல் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந் நடவடிக்கையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மானிப்பாய் இளவாலை பொலிஸார் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (2-9-23)

# சமூக சீர்கேடுகள் இடம்பெறும் விடுதிகள் முற்றுகையிடப்படும்

## மாநகர முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சமூகச் சீர்கேடுகள் இடம்பெறுகின்ற விடுதிகள் முற்றுகையிடபபடுவது வரவேற்கத்தக்க விடயம் எனவும் சமூக சீர்கேடுகளுக்கு துணைபோகும் விடுதிகள் முற்றுகையிப்படுமெனவும் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.அரியாலை ஆனந்தன் கடையில் அமைந்துள்ள விடுதி மற்றும் யாழ்.அம்மன் வீதியில் மசாஜ் நிலையம் என்பன கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸாரினால் முற்றுகையிடப்பட்டு, அங்கிருந்த 5 பெண்கள் உள்ளடங்கலாக 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி, அனுராதபுரம், மாத்தளை, யாழ்.உரும்பிராய் ஆகிய பகுதிகளினைச் சேர்ந்த 23 வயதிற்கும் 36 வயதிற்கும் இடைப்பட்ட பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் யாழ்.நீதவான் நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாநகர முதல்வர் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகர சபை அனுமதி பெற்றிருந்தாலும் சமூக சீர்கேடான விடயங்கள் விடுதிகளில் நடந்தால் அவ்விடுதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இது தொடர்பாக யாழ்.மாநகர சபை உறுதியான நிலைப்பாட்டிலுள்ளது .

கடந்த காலங்களிலும் சமூக சீர்கேடுகளுக்கு துணை போன பல விடுதிகள் முற்றுகையிடப்பட்டிருந்தன. அத்துடன் மேற்குறிப்பிடப்பட்ட விடுதிகள் முற்றுகையிடப்பட்ட போது, அது தொடர்பாக நான் அறிந்தவுடன் உடனடியாக அவ்விடத் திற்கு மாநகர சுகாதார பரிசோதகர்களையும் அனுப்பியிருந்தேன் .

இவ்வாறான சமூக சீர்கேடான விடயங்கள் நடைபெறுகின்றது என அறிந்தால் அது தொடர்பாக உடனடியாக அறிவிக்கப்பட்டால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

# குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் இருவர் படுகாயம்

(மானிப்பாய்)

யாழ். சுழிபுரம் ஐயனார் ஆலயத்திற்காக ஒதுக்கப்பட்ட 900 பரப்பு காணியை பராமரிப்பது தொடர்பில் இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கோடரி வெட்டுக்கு இலக்காகி யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வட்டுக் கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இச்சம்பவத்தில் அதே இடத்தினை சேர்ந்த இ.ஜெயரூபன்(வயது 29), ஸ்ரீ. ஜெயச்சந்திரன் (43)ஆகிய இருவருமே தலையில் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் மீது மற்றைய குடும்பத்தினைச் சேர்ந்த நால்வர் கோடரிகள், பொல்லுகள் மற்றும் போத்தல்கள் சகிதம் தாக்குதல் மேற்கொண்டதாகவும் இதில் படுகாயமடைந்த இவர்கள் முதலில் சங்கானை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் . போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-9-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை தரைப்படையின் தொண்டர் படையணி

**இலங்கைத் தரைப்படையின் தொண்டர் படையணியின் மகளிர் படைக்கு தமிழ் யுவதிகள் பயிற்சி மகளிர் வீராங்கனைகளாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் கிழக்குப் பிராந்தியங்களிலிருந்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.**

## சேர்த்துக் கொள்வதற்கான அடிப்படைத் தகைமைகள்

- மணமாகாத பெண்ணாகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும்.
- சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தில் 18 வயதுக்கு குறையாமலும் 24 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- 05அடி 03 அங்குல உயரத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்
- 8 ஆம் வகுப்பு (9 ம் வருடம்) சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- தொழில்நுட்பம், கணனி, வாத்தியம் இசைத்தல், நடனம் போன்ற பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

## சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வசதிகள்

- வீராங்கனைகளுக்கு சகல கொடுப்பனவுகளுடன் (சராசரியாக) மாதாந்தம் 42498.36 ரூபாவாகும்.
- உணவு, தங்குமிடம், சீருடைகள், மருத்துவ மற்றும் போக்குவரத்து வசதிகள் இலவசமாகக் கிடைக்கும்.
- 15 வருட சேவைக் காலத்தின் பின் ஓய்வு பெறலாம்.
- தரைப்படை அங்கத்தவர் ஒருவருக்கு உரித்தான அனைத்து நலன்புரி வசதிகள் கடன் வசதிகள் மற்றும் காப்புறுதி வசதிகள் கிடைக்கும்.

**மேற்படி அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.**

- பிறப்புச் சான்றிதழ்
- பாடசாலை விடுகைப் பத்திரம்
- கல்வித் தகைமைகள் பற்றிய சான்றிதழ்
- தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்
- அண்மையில் பெற்றுக் கொண்ட 2 நன்னடத்தை சான்றிதழ்கள்
- பொலிஸ் அறிக்கை
- 06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளரின் மேலொப்பத்துடனான கிராம சேவையாளர் சான்றிதழ்
- ஆள் அடையாள அட்டை அல்லது அடையாளத்தை நிரூபிப்பதற்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய அடையாள அட்டை (வெளிநாட்டு கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம்)

**நேர்முகப் பரீட்சைகள் 2014-01-01 ஆம் திகதி முதல் 2014-03-31 ஆம் திகதி வரை பின்வரும் இடங்களில் நாளாந்தம் நடைபெறும்.**

- பாதுகாப்புப் படைத் தலைமையகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி: 021 222 2777/021 222 2112)
- பாதுகாப்புப் படைத் தலைமையகம், கிழக்குப் பிராந்தியம் (தொலைபேசி:- 027 225 9137/027 225 9092
- பாதுகாப்புப் படைத் தலைமையகம், கிளிநொச்சி (தொலைபேசி: 021 2283912)
- பாதுகாப்புப் படைத் தலைமையகம், முல்லைத்தீவு (தொலைபேசி: 011-3009729/011-3144331)
- 6 ஆவது இலங்கை மகளிர் படையணி- கொக்காவில் (தொலைபேசி: 011 3168454)

(சி-6686)

**மேலதிக விபரங்களுக்கு:** www.army.lk/slavf **எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.**

**இலங்கைத் தரைப்படை தொண்டர் படையணி**

**முகவரி: ஆட்சேர்ப்பு அதிகாரி,**
**தலைமையகம்,**
**இலங்கைத் தரைப்படை தொண்டர் படையணி,**
**இராணுவ முகாம் ,**
**சாலாவ, கொஸ்கம.**

**விசாரணைகள்:0362255362/0113188558/0113560003**
**மின்னஞ்சல்:** hqslacf@army.lk

# மாற்றுத் திறனாளிகளுக்கான சமூகவள நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

மாற்றுத்திறனாளிகளுக்கான சமூக வள நிலையமான கருவி நிலையம் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இல. 90, செங்குந்தாவீதி ,திருநெல்வேலி கிழக்கில் இதுவரை காலமும் இயங்கி வந்த கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம் கடந்த 4 ஆம் திகதி முதல் இல. 1166/15, அருளம்பலம் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இயங்கி வருகின்றது.

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையத்தோடு தொடர்புகளை மேற்கொள்ள விரும்புகின்றவர்கள் புதிய முகவரியில் இயங்கும் கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையத்தோடு தொடர்புகளை மேற்கொள்ளுமாறு அந்நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 205 4224, 0789902336 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெறமுடியும். (2-4)

# பாணின் நிறையை குறையாமல் தயாரியுங்கள் வெதுப்பக உரிமையாளர்களிடம் வேண்டுகோள்

(மானிப்பாய்)

ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராமிற்கு குறையாமல் தயாரிக்குமாறு வெதுப்பக உரிமையாளர்களிடம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் யாழ்.மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்தசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மல்லாகம் மற்றும் பருத்தித்துறை பகுதியில் உள்ள விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்ட பாணின் நிறைகள் குறைவடைந்து காணப்பட்டமை பாவனையாளர் அதிகார சபையினால் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஒரு இறாத்தல் பாண் 380 கிராமிற்கும் 410 கிராமிற்கும் இடைப்பட்ட நிறையுடையதாக காணப்பட்டன.

இதனால் யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பாணின் நிறையை 450 கிராமிற்கு குறையாமல் உற்பத்தி செய்ய வேண்டும்.

இது தொடர்பாக விரைவில் யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்துடன் கலந்துரையாடி பாணின் நிறையினை சரியான முறையில் பேணு தல் தொடர்பாக அறிவுறுத்தவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(2-9-23)

## அறிவித்தல்

தவிர்க்க முடியாத காரணங்களால் 1.03.2014 நடைபெற விருந்த சீட்டிழுப்பு 27.04.2014 வரை நீடிக்கப்பட்டிருப்பதை நண்பர்களுக்கும் அபிமானிகளுக்கும் அறியத் தருகின்றோம். யாழ். லயன்ஸ் கழகம் (5762)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 15.25 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDA / உதவிக் கணக்காளர்<br>தொ.இ: B/2884 | பிறப்பு: 1981 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: 33.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: M.Sc / Net work (UK – Work Permit)<br>தொ.இ: G/1598 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 11 சூரி, செவ் 9 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2885 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 32.5 செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: M.Sc / பார்மசி (UK – PR)<br>தொ.இ: G/1599 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 1<br>கி.பா: 6.75 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: B/2889 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 20 செவ் 4 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Banking Course / Bank B.A<br>தொ.இ: G/1604 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 27.5 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/2891 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 30.75 செவ் 4இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HNDA, CMA Scholarship, 1st in Com - Following<br>தொ.இ: G/1608 |

# கல்யாண மாலை

**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு குழந்தை இயேசு ஆலயத்தை அமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை

## மனிதவுரிமை ஆணைக்குழுவினூடாக நீதிமன்றம் செல்ல முடிபு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து அகற்றப்பட்ட குழந்தை யேசு ஆலயத்தை அமைத்து தருமாறு மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

முல்லைத்தீவு தெற்கு கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள உண்ணாபுலவு கிராமத்தின் பி-297 பிரதான வீதியில் பிராந்திய சுகாதார சேவைப் பணிமனை அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் குறித்த பணிமனை அமைப்பதற்காக கடந்த 2010 ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது அலுவலக கட்டடம் அமைப்பதற்கு இடையூறாக தேவாலயம் உள்ளதாக குறித்த பணிமனையின் நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டு முல்லைத்தீவின் முன்னாள் பங்குத் தந்தை அ.எரிக் றொசானிடம் இடிப்பதற்கான அனுமதி கேட்கப்பட்டது.

ஆயினும் பங்குத் தந்தையின் அனுமதி பெறப்படாமலேயே தேவாலயம் இடிக்கப்பட்டு அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த அலுவலகம் அமைக்கப்பட்டு 4 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை இடிக்கப்பட்ட ஆலயம் அமைக்கப்படவில்லை.

அத்தோடு ஆலயம் இடிக்கப்பட்டபோது சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் நாசமாக்கப்பட்டன.



ஆலயம் அமைந்திருந்த இடம்

ஆயினும் அப்பொருட்கள் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை தெரியவரவில்லை.

குறித்த அலுவலகம் அமைப்பதற்கு இடையூறு எனத் தெரிவித்து தேவாலயம் இடிக்கப்பட்ட போதும் அவ்வாலயம் அமைந்திருந்த பகுதி வரை கட்டடம் விஸ்தரிக்கப்படவில்லை.

இந்நிலையில் அலுவலக கட்டடத்திற்கும் தேவாலயம் அமைந்திருந்த இடத்திற்கும் 20 மீற்றர் தூர இடைவெளி காணப்படுகின்றது.

இவ் அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தினுள் முல்லைத்தீவு பிரதேச வைத்தியசாலை உள்ளது.

பெரும்பாலும் வைத்தியசாலை வளாகத்தினுள் ஏதாவது ஒரு ஆலயம் அமைந்திருப்பது வழமையாகவுள்ளதென சுட்டிக்காட்டியுள்ள மக்கள் சம்பந்தப்பட்டோர் உரிய இடத்தில் தேவாலயத்தை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

முன்னர் தேவாலயம் அமைப்பதாகக் கூறி அத்திவாரம் போடப்பட்ட போதும் அது தற்போது இடித்தழிக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் ஏப்ரல் மாதத்தினுள் தேவாலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிடின் மனிதவுரிமை ஆணைக்குழுவினூடாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு தீர்வு பெறப்படுமென மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த ஆலயத்திற்கு ஏற்கனவே அனைத்து இன மக்களும் வருகை தந்து வழிபாட்டில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-9-267)

# மொழி முனை- 2014 விவாதப் போட்டி தொடர்

(கிளிநொச்சி)

மொழி முனை- 2014 நாடளாவிய விவாதப் போட்டித் தொடர் அகில இலங்கை ரீதியில் இடம்பெறவுள்ள நிலையில் தற்போது மாவட்ட ரீதியில் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி பாடசாலைகளுக்கிடையில் மாவட்ட ரீதியில் இடம்பெற்ற போட்டி முடிவுகள் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைக ளுக்கிடையிலான போட்டிகளில் முதலாவது இடத்தினை வித்தியானந்த கல்லூரியும் இரண்டாமிடத்தை முல்லைத்தீவு மகா வித்தியாலயமும் மூன்றாமிடத்தை அளம்பில் உரோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டுள்ளன.

அத்தோடு கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவுகளின்படி கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலாமிடத்தையும் உருத்திரபுரம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பாரதி வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன.

அத்தோடு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான போட்டி முடிவில் முதலாமிடத்தை யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையும் இரண்டாமிடத்தை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மூன்றாமிடத்தை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியும் பெற்றுக் கொண்டுள்ளன. (2-9)




# முல்லைத்தீவிலிருந்து பரந்தன் பயணிக்கும் தனியார் பேருந்துகளில் அதிகபணம் அறவீடு

(முல்லைத்தீவு)

முல்லைத் தீவிலிருந்து பரந்தன் செல்லும் தனியார் பேருந்துகளில் அதிகமாகப் பணம் அறவிடப்படுவதாக பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். முல்லைத்தீவிலிருந்து பரந்தனுக்கான தூரம் 52 கிலோ மீற்றர் ஆகும். அதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து பரந்தனுக்கான தூரம் 62.5 கிலோ மீற்றர் ஆகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து பரந்தனுக்குச் செல்கின்ற கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்துகள் 93 ரூபாவும் முல்லைத்தீவிலிருந்து பரந்தனுக்குச் செல்கின்ற முல்லை.மாவட்ட தனியார் பேருந்துகள் 120 ரூபாவும் அறவிட்டு வருகின்றன.

இவ்விரண்டு மாவட்டங்களின் தூரங்களின் படி முல்லை.மாவட்டத்திலிருந்து பரந்தன் செல்லும் தூரமே குறைவாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் முல்லை.மாவட்ட தனியார் பேருந்துகள் 120 ரூபாவை அறவிடுவது எவ்வாறு நியாயமாகுமென பயணிகள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

எனவே, மீள்குடியேற்றம் செய்யப்பட்ட காலப் பகுதியில் முல்லை.-பரந்தன் போக்குவரத்திற்கு அறவிடப்பட்ட 80 ரூபாவை மீளவும் அறவிட வேண்டுமென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் உரிய நடவடிக்கை எடுக்க வேண் டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-267)

# பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் சங்கத் தலைவர் த.நவநீதன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது சங்கத்தின் வளர்ச்சிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாகவும் முச்சக்கரவண்டிக்கு மீற்றர் பூட்டுதல், பழைய நிர்வாகத்தினர் கணக்குகளை சமர்ப்பித்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்திற்கு மாவட்டத்திலுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் 250 இற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (2-9)





**பெண்களுக்கு ஏற்படும் கருப்பை கழுத்துப் புற்று நோயை ஆரம்பித்திலேயே இனங்காணக் கூடிய 1.2 மில்லியன் ரூபா பெறுமதியான இயந்திரம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு இலங்கைக் குடும்பத் திட்ட சங்கத்தினரால் வழங்கப்பட்டது.**

**இவ் உபகரணம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது.... (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிவேக இணையம் கண்டுபிடிப்பு




அமெரிக்க கம்பனியான எம்.டி.எப்.ஐ இனி உலகின் எந்த மூலையில் நீங்கள் இருந்தாலும் தாராளமாக இணையத்தை பயன்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளது. வந்துவிட்டது அவுட்டர்நெட்...யுஎஸ் நிறுவனத்தின் புதிய கண்டுபிடிப்பு இந்த கம்பனி "அவுட்டர் நெட்" விண்கலங்களை விண்வெளிக்கு அனுப்பி இந்த வசதியை உருவாக்க உள்ளது.

இன்டர்நெட் கேள்விப்பட்டிருக்கிறோம். அவுட்டர் நெட் தெரியுமா? அவுட்டர் நெட் என்னும் ஒரு புது வகை இணைய வசதியை இந்த அமெரிக்க கம்பனியினர் உருவாக்கியுள்ளனர்.

இது தற்போது சோதனை நிலையில் உள்ளது. அதாவது "கியூப்ஸாட்" என்னும் சிறு சிறு விண்கலங்கள் விண்வெளிக்கு அனுப்பப்பட்டு கம்பியில்லா இணைய வசதியை தோற்றுவிக்கும். இதன் மூலம் உலகத்தின் எந்த மூலையிலும் இலவச இன்டெர்நெட் பெற முடியும்.

மேலும் இந்த உலகத்தில் உள்ள அனைத்து பேருக்கும் இணைய இணைப்பு கொடுக்க வெறும் 100 சிறிய கியூப்ஸாட்கள் தான் தேவை. இதன் மூலம் உலகத்தின் ஒவ்வொரு நிலம் , கடல் , பாலைவனம் என்று அத்தனை இடத்துக்கும் இணைய வசதி கிடைக்கும்.

இதில் எந்த தடங்கலும் இருக்காது .ஏனெனில் இது ஒரு நாட்டுக்கு மட்டும் சொந்தமானது அல்ல.அதிக செலவு, தடங்கல்களால் இன்று வரை அதிக மக்கள் இணைய இணைப்பு பெற இயலாமல் உள்ளனர்.

ஆனால்.இந்த சோதனை மட்டும் வெற்றி அடைந்தால் துணை கருவிகள் மூலம் எளிதாக நாம் இணைய வசதியை பெற முடியும். அக்கம்பனி இதற்கான வேலைகளில் விரைவாக ஈடுபட்டு வருகிறது.வரும் ஏப்ரலில் இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் தொடங்க உள்ளன.

# சோனி நிறுவனம் அஸ்தமிக்கிறதா?




உலகின் முதற்தர இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனமாக மக்களின் நன்னம்பிக்கையை வென்ற சோனி நிறுவனம். ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள தனது தலைமைப்பீடத்தை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளது.

தனது கட்டமைப்பினை புதுப்பிக்கும் பொருட்டே இந்த முடிவை சோனி நிறுவனம் எடுத்துள்ளது.

இந்த வருட இறுதிக்குள் 1000 வரையான பணியாளர்களை இடை நிறுத்தவுள்ளதாக அறிவித்திருந்ததுடன் அமெரிக்காவிலுள்ள 20 களஞ்சியங்களையும் மூடவுள்ளதாக அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே டோக்கியோவிலுள்ள தலைமைப் பீடத்தினை விற்பனை செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் இதனை விற்பனை செய்வதன் மூலம் 146.4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக சோனி பெற்றுக்கொள்ளும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# NISSAN நிறுவனத்தின் புதிய தொழில்நுட்பம்





பிரபல்யமான கார் உற்பத்தி நிறுவன்மான Nissan தான் புதிதாக உற்பத்தி செய்யும் கார்களில் கமெரா மற்றும் LCD திரை தொழில்நுட்பத்தினை உட்புகுத்துகின்றது.

உலகிலேயே முதன் முறையாக இத்தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்தும் அந்நிறுவனம் சாரதியின் முன்னே இரு புறங்களிலும் காணப்படும் கண்ணாடிகளுக்கு பிரதியீடாகவும். பின்புறமாக வரும் வாகனங்களை அவதானிக்கப் பயன்படும் கண்ணாடிக்கு பதிலாகவும் கமெராக்களை பொருத்தியுள்ளது.

இவற்றிலிருந்து வரும் காட்சிகளை சாரதியின் முன்னால் பொருத்தப்பட்டிருக்கும் LCD திரையினூடாக அவதானித்து இலகுவாக காரினை செலுத்தக்கூடியவாறு இருக்கும் என அந் நிறுவன்ம் தெரிவித்துள்ளது.

# திருட முடியாத வகையில் ஜேம்ஸ்பாண்ட் கைபேசி




உரிமையாளரைத் தவிர மற்றவர்கள் திறக்க முயன்றால் தன்னில் உள்ள தகவல்களை அழித்துக் கொண்டு. வேறு யாரும் பயன்படுத்த முடியாத அளவுக்கு தன்னையும் அழித்துக் கொள்ளும் ஜேம்ஸ்பாண்ட் வகையிலான உலகின் மிகப் பாதுகாப்பான மொபைல் போனை போயிங் நிறுவனம் தயாரித்துள்ளது. கூகுளின் ஆன்ட்ராய்டு தொழில்நுட்பத்தில் இந்த போன் இயங்கும். அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்கள் பாதுகாப்பான முறையில் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்காக இந்த போன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த போனின் மற்ற உயர் ரக பாதுகாப்பு அம்சங்கள் குறித்த தகவல் வெளியிடப்படவில்லை. ஜிஎஸ்எம், டபிள்யூ சிடிஎம்ஏ மற்றும் எல்டிஇ தொழில்நுட்பங்களின் கீழ் செயற்படும் இரண்டு மைக்ரோ சிம்கார்டுகளை இந்த போனில் பயன்படுத்த முடியும். இந்தப் போனில் மேற்கொள்ளும் உரையாடல்களை மற்றவர்கள் இடைமறித்துக் கேட்பது சிரமம்.

தொலைக்காட்சியுடன் இணைத்துக் கொள்ளத் தக்க வகையில் எச்டிஎம்ஐ கேபிளை இணைப்பதற்கான வசதியும் இந்த மொபைல் போனில் தரப்பட்டு உள்ளது. யூஎஸ்பி, வைபை, புளூ டூத் போன்ற வசதிகளும் உள்ளன.

முதற்கட்டமாக இந்த போன்கள், அரசு மற்றும் இராணுவம், உள்நாட்டுப் பாதுகாப்பு போன்ற துறைகளுக்கு மட்டுமே வழங்கப்படும் என போயிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட குறைந்த அளவு வாடிக்கையாளர்களுக்கு மட்டும் இந்த உயர்ரக போனை விற்பனை செய்ய போயிங் திட்டமிட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு மட்டும் இந்த போன் விற்பனை செய்யப்பட்டாலும், அவர்கள் இந்த போனின் பாதுகாப்பு அம்சங்கள் குறித்த தகவல்களை வெளியிடமாட்டோம் என ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும்.

பொதுமக்களுக்கு இந்தப் போனின் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் தொழில்நுட்பம் குறித்த தகவல்கள் வெளியிடப்படமாட்டாது எனவும் போயிங் அறிவித்துள்ளது. தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் தொழில்நுட்பம் இந்த போனின் உச்சபட்ச பாதுகாப்பு அம்சமாக இருக்கும்.

இந்த போன் திறக்க முடியாத அளவுக்கு வடிவமைக்கப் பட்டுள்ளது. மீறித் திறக்க முயன்றால் அதிலுள்ள அனைத்துத் தகவல்களும் அழிந்து விடும். பிளாக் போன் எனப் பெயரிடப்பட்ட இந்த போனுக்கு மாற்று உதிரிப்பாகங்கள் எதுவும் இல்லை. உதிரிப்பாகங்களை மாற்ற முயன்றாலும் போன் அழிந்து விடும்.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

740

## தண்டனைக்குத் தகுந்த குற்றம்





ஒருநாள் காலையில் அக்பர் தன் அரண்மனை உப்பரிகையில் உலாவிக்கொண்டிருக்கையில், அவர் பார்வை நந்தவனத்தின்மீது சென்றது. அது வசந்த காலம் என்பதால் மரங்களும், செடிகளும் வண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்க, அவற்றிலிருந்து வீசிய நறுமணம் மனதைக் கிறங்கச் செய்தது. இளங்காலையில் வீசிய தென்றல் அவர் உடலை இதமாக வருடிச் செல்ல, அவர் காற்றில் மிதப்பதைப் போல் உணர்ந்தார்.

இவ்வாறு தன்னை மறந்த நிலையில் உலாவிக் கொண்டிருந்த அக்பர், நந்தவனத்தில் நடந்து செல்லும் வழியில் கல் ஒன்று இருப்பதை கவனிக்கத் தவறிவிட்டார். அதில் கால் இடறி இடித்துக்கொள்ள, கால் கட்டை விரலிலிருந்து இரத்தம கசியத் தொடங்கியது. அதுவரை அவர் மனதில் பொங்கிய உற்சாகம் கணத்தில் மறைந்து போக, கோபமும், எரிச்சலும் குடிகொள்ள, அவர் "தோட்டக்காரன் எங்கே? எங்கே இருந்தாலும் வா!" என்று கத்தினார். தோட்டக்காரன் மண்வெட்டியை எடுக்கக் குடிசைக்குள் சென்று இருந்ததால், அக்பரின் கூக்குரல் அவன் காதில் விழவில்லை. கூப்பிட்ட குரலுக்கு தோட்டக்காரன் வராததால், அக்பரின் கோபம் தலைக்கு ஏறியது. அரண்மனையை அடைந்தவுடன் காவல் அதிகாரியை அழைத்தவர், நடந்தவற்றைக் கூறி தோட்டக்காரனை தூக்கிலிடும் படி உத்தரவிட்டார்.

காவல் அதிகாரங்கு அதைக்கேட்டு தூக்கிவாரிப் போட்டது. ஒரு சாதாரணத் தவறுக்கு மரண தண்டனையா என்று அதிர்ந்து போனார். ஆனால் சக்கரவர்த்தி மிகவும் கோபமாக இருந்ததால், அவரிடம் எதுவும் கேட்கத் துணிச்சலின்றி, அவர் பின்




வாங்கினார். பின்னர் தன்னுடைய இரு காவலர்களை அழைத்துக் கொண்டு, தோட்டக்காரனை நோக்கிச் சென்றார். காலை நேரத்தில் காவல் அதிகாரி தன் ஆட்களுடன் தன்னைத் தேடி வருவது கண்டு தோட்டக்காரன் திடுக்கிட்டான்.

"என்ன விடயம் ஐயா?" என்று நடுங்கும் குரலில் கேட்க, "தோட்டத்தில் சக்கரவர்த்தி உலாவும் போது ஒரு கல்லில் அவர் காலை இடித்துக் கொண்டார். அது உன்னுடைய தவறு என்பதால் உனக்கு நாளை காலை தூக்குத் தண்டனை!" என்றார் அதிகாரி.

இதைக் கேட்டதும் தோட்டக்காரன் துடித்தான். அவன் மனைவியோ அதைக் கேட்டு அலறி அழுதாள். "கால் இடித்துக் கொண்டதற்கு தூக்குத் தண்டனையா? இது என்ன அநியாயம்? நீங்கள் சக்கரவர்த்தியிடம் எடுத்துச் சொல்லக் கூடாதா?" என்றாள். "எங்களால் ஒன்றும் செய்யமுடியாது. உன் கணவன் தோட்டத்தில் விட்டுவைத்த கல் இப்போது அவன் தலையிலேயே விழப் போகிறது" என்ற அதிகாரி சற்று யோசித்தபின், "தூக்குத்தண்டனை நாளைக்குத்தான், இன்னும் ஒருநாள் சமயம் உள்ளது. நீ பீர்பாலிடம் போய் உன் கணவனைப் பற்றிக் கூறி விடுவிக்க முயற்சி செய்" என்று சொல்லிவிட்டு, தோட்டக்காரனின் கைகளில் விலங்கு மாட்டி இழுத்துச் சென்றனர்.........

(தொடரும்)

### அலெக்சாண்டர் கிரகம் பெல்



அலெக்சாண்டர் பெல் ஸ்கொட்லாந்தில் எடின்பேர்க்கில் 3 மார்ச் 1847 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஓர் அறிவியலாளர், பொறியியாளர், கண்டுபிடிப்பாளர், ஆசிரியர், அறிவியல் அறிஞர். பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்ததற்காக அறியப்படுகிறார். தனது இளமையில் பிரித்தானியக் குடிமகனாக இருந்தார். பின்னர் அமெரிக்கக் குடியுரிமை பெற்றார்.

இவரது தாயாரும் மனைவியும் செவிடராதலினால் இவரது ஆய்விற்கு இது ஓர் உந்து சக்தியாக அமைந்திருக்கலாம். இவரது ஆய்வுகள் ஊடாக 1876 ஆம் ஆண்டு தொலைபேசி உருவாக்கப்பட்டது. இவர் பெல் தொலைபேசி நிறுவனத்தின் நிறுவனரும் ஆவார்.

கண்பார்வை அசைவுகளினால் பல்வேறு உணர்வுகளை எவ்வாறு காட்டுவது? உதடுகளின் அசைவைக் கொண்டு ஒருவர் பேசுவதைக் காது கேளாதோர் எவ்வாறு புரிந்து கொள்வது? என்பதைப் பற்றியெல்லாம் பெல்லின் தந்தை பல நூல்களை எழுதியுள்ளார்.

எட்டு வயதிலேயே கிரகம் நன்றாகப் பியானோ வாசிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார். பத்து வயதான போது அவருக்குப் பள்ளி செல்ல நாட்டமில்லாமல் போனது. இலத்தீன், கிரேக்க மொழிகளைப் படிப்பதைவிட பியானோ வாசிப்பதிலும், ஒலி அலைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வதிலும் தனது நேரத்தைப் போக்கினார் . பேச்சை மின் ஒலியாக மாறறும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தபோது வந்த காது கேளாத பெண்ணை விரும்பி அவரையே திருமணம் செய்துகொண்டார்.

பியானோவில் ஒலி எழுப்பி மின்சாரம் மூலமாக அந்த இசையை ஒரு குறிப்பிட்ட தொலைவுக்கு அனுப்பினார் பெல். தந்தி முறையில் வெறும் ஒலிகள் மட்டுமே அனுப்பப்பட்டன. பேச்சுகளையும் அந்த முறையில அனுப்பலாமே என்று கிரகமுக்கு 18 வயதிலேயே தோன்றியது.

அதனால் அந்த முயற்சிகளில் ஈடுபட்டார் . அக்காலத்தில் மனிதனின் பேச்சொலிகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு தந்திகள் மூலம் அனுப்பப்பட்டு வந்தது. அந்த முறைகள் இவருடைய ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாயிருந்தன.

1876 ஆம் ஆண்டு உலகின் முதல் தொலைபேசி பேசியது பெல் அவருடைய உதவியாளர் வாட்சன் என்பவரிடம் பேசினார். அவர் முதலில தொலைபேசியில் பேசிய சொற்றொடர் " வாட்சன் இங்கே வாருங்கள். உங்களைக் காண வேண்டும்."(Watson- come here- I want to see you) என்பதுதான். இந்த சொற்களை வாட்சனால் தெளிவாகக் கேட்க முடிந்தது.

பெல் தொலைபேசியுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அரசு நிறுவனத்தின் மூலம் பொட்டோ போன், ஆடியோ மீட்டர் மெட்டல் டிடக்டர், இண்டக்ஷன் பேலன்ஸ், வாக்ஸ் ரிகார்டிங் சிலிண்டர், கிராமபோன் போன்ற கருவிகளைக் கண்டு பிடித்தார்.

விமானத்தின் எய்லிரான் என்ற பகுதியைக் கண்டுபிடித்தவர் பெல் ஆவார். பிற்காலத்தில் கடல் விமானத்தைச் சீர்திருத்தி அமைப்பதில் வெற்றி கண்டார். இப்படி தனிப்பட்ட முறையிலும், பிற அறிவியலறிஞர்களுடன் சேர்ந்தும் 59 கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமையை பெல் பெற்றுள்ளார் என்பது அவருடைய வரலாற்றில் மிக முக்கியமான அம்சமாகும்.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2014 07

- 1793 - ஸ்பெயின் மீது பிரான்ஸ் போரை அறிவித்தது.
- 1798 - பிரெஞ்சு இராணுவம் ரோமினுள் நுழைந்தது. ரோமன் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1814 - பிரான்சின் முதலாம் நெப்போலியன் குரோன் நகரில் உருசியர்களுக்கும் புருசியர்களுக்கும் எதிரான போரில் வெற்றி பெற்றான்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வடமேற்கு ஆர்கன்சாவில் அமெரிக்கப் படைகள் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படையினரை வென்றனர்.
- **1876 - அலெக்சாண்டர் கிரகம் பெல் தொலைபேசிக்கான காப்புரிமம் பெற்றார்.**
- 1902 - இரண்டாம் போவர் போர்: தென்னாபிரிக்காவின் போவர்கள் பிரித்தானியர்களுக்கு எதிரான கடைசிச் சமரில் வெற்றியீட்டினர்.
- 1911 - மெக்சிக்கோவில் புரட்சி வெடித்தது.
- 1912 - தென் முனையைத் தாம் டிசெம்பர் 14, 1911 இல் அடைந்ததாக ருவால் அமுன்சென் அறிவித்தார்.
- 1918 - முதலாம் உலகப் போர்: பின்லாந்து ஜேர்மனியுடன் கூட்டுச் சேர்ந்தது.
- 1936 - லொக்கார்னோ உடன்படிக்கைகள், வெர்சாய் ஒப்பந்தம் ஆகியவற்றிற்கு எதிராக ரைன்லாந்தை ஜேர்மனி கைப்பற்றியது.
- 1951 - கொரியப் போர்: கொரியாவில் ஐ.நாப் படைகள் சீனப் படைகளுக்கெதிராகத் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1969 - கோல்டா மெயிர் இசுரேலின் முதற் பெண் பிரதமரானார்.
- 1989 - மக்கள் சீனக் குடியரசு திபெத்தின் லாசா பகுதியில் இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்தனர்.
- 1996 - பாலஸ்தீனத்தில் முதலாவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றம் அமைக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1274 - தாமஸ் அக்குவைனஸ், இத்தாலிய கத்தோலிக்க மதகுரு (இ. 1225)
- 1857 - ஜூலியஸ் வாக்னர்-ஜோரெக், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1940)
- 1938 - டேவிட் பால்ட்டிமோர், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1938 - ஆல்பர்ட் ஃபெர்ட், பிரெஞ்சு இயற்பியலாளர்

### இறப்புக்கள்

- கி.மு 322 - அரிஸ்டாட்டில், மெய்யியலாளர் (பி. கி.மு. 384)
- 1932 - அரிஸ்டைட் பிறையண்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1862)
- 1944 - கல்லடி வேலுப்பிள்ளை, ஆசுகவி, ஈழத்து எழுத்தாளர் (பி. 1860)
- 1954 - ஓட்டோ டியெல்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1876)
- 1990 - சுத்தானந்த பாரதியார், கவியோகி (பி. 1897)
- 1995 - ஜோர்ஜெஸ் கோஹ்லெர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1946)
- 1997 - எட்வர்ட் பேர்செல், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....ஒவ்வொரு படிக்கட்டுகளாக ஏறி சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலை அடைகிறோம். கோயிலுக்கு எதிரே பெரியதொரு மேடையுடன் கூடிய தகரக் கொட்டகை. எதிர்ப்புறம் சுந்தர மூர்த்தீஸ்வரர் கோயில். பிற்காலத்திய சிறுகோயில். சுந்தரலிங்கர் என்ற சுந்தரமூர்த்தீஸ்வரர் ஆலயத்தைத்தான் சுந்தரமகாலிங்கர் கோயில் என்றழைக்கிறார்களோ?

கேள்வியைத் தியாகராசனிடம் கேட்கிறோம். அதெல்லாம் இல்லை, சுந்தரமகாலிங்கரைத் தரிசிக்க இன்னும் மேலேறிப் போக வேண்டும். இங்கு இருப்பவர் சுந்தரலிங்கர். அகத்தியரால் பிரதிட்டை செய்யப்பட்டவர் என்றார்.

உள்ளே கருவறையில் நிமிர்ந்து இருக்கும் சுயம்பு மூர்த்தியாக சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்ந்திருக்க சந்தனத்தால் முகம் வடிவமைக்கப்பட்டிருந்தது.

எதிரே தாமிரக் கவசம் போர்த்திய நந்தியும் நந்திக்கு இருபுறமும் இரு கல் யானைகளும் வாகனங்களாக இருக்க சிறிய வடிவில் கோயில் அமைந்துள்ளது. கோயிலின் முகப்பில் பு.ச.கருப்ப நாடார் உபயம் 7.12.1938 என்ற திருப்பணி அறிவிப்புப் பலகை கோயிலின் பழமையைத் தெரிவிக்கிறது.

கோயில்தான் புதிய வடிவமே தவிர உள்ளே இருக்கும் சுந்தரமூர்த்திதான் சதுரகிரி லிங்கங்களில் மிகப்பழமையானவர் எனத் தலபுராணம் தெரிவிக்கிறது.

### அகத்தியர் வருகை

சதுரகிரியின் மூலிகை வளங்களையும் அங்கு பஞ்ச தரு நிழலிலும் குகைகளிலும் தவம் செய்கின்ற சுந்தரானந்தர், யூகி, கொங்கணவர், கோரக்கர், போகர் முதலான சித்தர்களைப் பற்றியும் அவர்கள் புசித்து வருகிற காயகற்ப சஞ்சீவி மூலிகைகளைப் பற்றியும் தேவரிஷிகள் மூலம் கேள்விப்பட்ட அகத்திய முனிவர், அவைகளைக் காண பொதிகை மலையிலிருந்து புறப்பட்டு வனசஞ்



சுந்தரமகாலிங்கர் கோயில் நுழைவாயில்

சாரமாக மலை, வனம், வனாந்திரம், காட்டாறு ஆகியவைகளைக் கடந்து சதுரகிரியை அடைந்தார்.

அகத்திய முனிவர் தங்களது சதுரகிரி மலைக்கு வந்திருப்பதையறிந்த சுந்தரானந்தர், யூகி முனிவர், கொங்கணர் முதலான பல சித்தர்களும் அகத்தியரை எதிர்சென்று வணங்கி, வாழ்த்தி தங்களது ஆசிரமத்துக்கு அழைத்து வந்து உபசரித்து, சதுரகிரிக்கு அவர் வந்ததற்கான காரணத்தை வினவினர்.

சித்தர்களின் உபசரிப்பில் மகிழ்ந்த அகத்தியர், கயிலையில் இறைவனின் திருமணத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கூறி, அவரின் கட்டளைப்படியே தென் திசைக்கு வந்து பொதிகையில் தங்கியிருப்பதாகவும், அங்கு இந்தச் சதுரகிரியின் மலை வளங்களையும், காயகற்ப மூலிகைகளையும், அதனைப் பயன்படுத்தும் சித்தர்களைப் பற்றியும் கேள்விப் பட்டதால் அவற்றை அனுபவித்து இன்புறவே தான் சதுரகிரிக்கு வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அகத்தியரின் பெருமைகளை முன்பே கேள்விப்பட்டிருந்த சித்தர்கள் அகத்தியரைத் தரிசித்ததையும் அவர் தங்களுடன் தங்குவதையும் பெரும்பேறாகக் கருதினர்.

சதுரகிரியில் சுந்தரானந்தரின் ஆசிரமத்தில் தங்கிய அகத்தியர் அந்த மலையின் பெருமைகளையும் மூலிகை வளங்களையும் சித்தர்களிடம் கேட்டு அறிந்ததுடன், அங்கு தான் வழிபடுவதற்காக சிவலிங்கம் ஒன்றையும் பிரதிட்டை செய்தார்.

ஆகம சாஸ்திரங்களின்படி அகத்தியர் தாம் ஸ்தாபித்த லிங்கத்தை வேளை தவறாமல் பூஜித்தார். சதுரகிரியில் தவம் செய்த சித்தர்களும் முனிவர்களும் அந்த லிங்கத்தை வழிபட்டு அதற்கான பூசை ஏற்பாடுகளையும் செய்து

**ஆன்மீகம் 54**

வந்தனர்.

இப்படி சதுரகிரியில் சித்தர்களுடன் சிவபூசையில் திளைத்திருந்த அகத்தியருக்குச் சிவபெருமான் தன்னைத் தென் பொதிகைக்கு அனுப்பும் சமயத்தில் தந்த வரம் நினைவுக்கு வரவே, இறைவனின் திருமணக் காட்சியை இந்தப் பெருமை மிகு சதுரகிரியில் காண விருப்பம் கொண்டார்.

எல்லா ஜீவராசிகளிலும் நிறைந்திருக்கிற எம்பெருமானே! நீ எத்தலத்தில் எக்காலம் நம்மை நினைவு கொள்ளுகிறாயோ, அக்காலத்தில் அந்த இடத்தில் நமது திருமணக் கோலத்தைக் காண்பித்துக் காட்சி தந்தருளுவோம் என்று அருளிச் செய்தீரே. அந்த அருள் வாக்கின்படி தற்சமயம் இந்தச் சதுரகிரியில் அக் காட்சியைத் தந்தருள வேண்டும் என சிவபெருமானை மனதில் நினைத்து வேண்டினார்.

எந்த இடத்தில், எந்த நேரத்தில் என்னை நினைத்துக் கொள்கிறாயோ அங்கு அப்போதே உமக்கு, திருமணக் காட்சியைத் தந்தருளுகிறேன் என்பது தானே இறைவன் அகத்தியருக்குத் தந்த வரம்.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



**66**

....1954 செம்மலிடம் பணிக்கு அமர்ந்தபோது ராயப்பேட்டையில் வீடெடுத்து இருந்தேன். அந்த நாளில் (1964 இல்) எனக்கும் செம்மலுக்கும் ஒரு சிறு மனஸ்தாபம். சிவாஜி அவர்களுக்கு தமிழ் நயத்துக்காகவே ஒரு படம் (மருத நாட்டு வீரன்) எழுதினேன். செம்மலுடன் நான் நெருங்கி இருந்தது சிலருக்குப் பிடிக்கவில்லை. என்னைப் பிரிக்க சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப் படத்தில் வில்லனுக்கு (வீரப்பா) சொல்லும் சில வசனங்களை சிவாஜி வாயால் பேச வைத்து செம்மலையே திட்டியிருக்கிறேன் என்று சொல்லி, செம்மல் மனதில் தப்பான எண்ணத்தை உருவாக்கி, என்னை வெளியே போகச் சொல்ல வைத்தனர்.

சரி இப்ப போறேன். எப்ப கூப்பிட்டாலும் வர்றேன் என்று வந்து விட்டேன். பலர் என்னை அழைத்தனர். நான் போகவில்லை. எப்போது என் பையில் இருக்கும் காசுகள் செலவாகி அடுத்தவர் தயவை நாடும் நிலை உருவாகிறதோ அப்போது என் ஊருக்குப் போய் விடுவேன். செம்மல் அழைக்கும்வரை பொறுத்து இருக்கிறேன் என்று சொல்லி என் மனைவியுடன், அப்போது இருந்த என் இரு குழந்தைகளையும் அவள் பிறந்த வீட்டுக்கே அனுப்பி விட்டேன்.

சும்மாயிருக்க மனமில்லாமல், அந்த ஓய்வில் இரு வருடங்களில் சக்கரவர்த்தி அசோகன், பாரி வள்ளல், சீதக்காதி ஆகியோரின் வரலாற்றை ஆராய்ச்சி செய்து எழுதியதுடன் நாகூர் ஆண்டவர் வர



எம்.ஜி.ஆரும் அவரின் அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியின் மகளான சத்தியபாமாவும் (அரசகட்டளை பட தயாரிப்பாளர்)

லாற்றை சுருக்கி கருணைக்கடல் என்று எழுதி அவரது ஆலயத்துக்கு காணிக்கையாக்கினேன்.

எங்கள் வீட்டிற்கு, தொடர்ந்து பழங்களைக் கூடையில் சுமந்து விற்கும் பெண்மணி ஒருத்தி வருவாள். அன்றைய தினம் அவளைப் பார்த்ததும் எனக்குள் ஒரு மின் அதிர்வு. ஆம்.... அவளது கையில் செம்மலை பச்சையாக குத்திக் கொண்டிருந்தாள்.

அவள் போன பின் நான் தனித்து அமர்ந்தேன். அவள் யார்? செம்மலை அவள் பார்த்தது மில்லை. அவரது காசை தின்றதுமில்லை. அவரது நினைவால் அவரை, தன் கையில் சுமந்து வருகிறாள். எத்தனை ஊசிக்குத்து.... எவ்வளவு வேதனைகள் தாங்கிக் கொண்டிருப்பாள், தான் காணாத அந்த மனிதருக்காகப் புனிதருக்காக. அவள் முன் நான் புழுவானேன். அவள் மனதில் கொண்டிருந்த அந்த மதிப்பு, மலை போலுயர்ந்து நான் கொண்டிருந்தது தூசு போலானது.

செம்மல் போ வென்று பலரைச் சொல்லியுள்ளார். அவர்கள் திரும்பி அவர் வாசலுக்கே வந்து சேர்ந்து விடுவர். நான் அவர் வாசல் பக்கமே போகவில்லை. அவர் திரும்பி அழைக்கும் வரை காத்திருக்க நான் யார்? அவரது உறவினனா? இல்லை பணியாள். என்னைப் போல் ஆயிரம் பேர் அவருக்கு... உணர்வு தடுத்தது. இன்று அதே உணர்வு தூண்டியது. பகல் மூன்று மணியிருக்கும். செம்மலை காணச் சென்றேன்.

சத்யா படிப்பிடிப்பு நிலையத்தில் அப்போது தாழம்பூ நடந்து கொண்டிருந்தது. நானும் அப்பூவில் நடக்கும் உணர்வில் போனபோது செம்மலே எதிர்ப்பட்டார். என்ன எங்கே வந்தீர்? எனக் கேட்டார்.

உங்களைப் பார்க்க என்றேன்.

அப்படியா... எங்கே வராமல் இருந்து விடுவீரோ என்று நினைத்தேன். நீர் முட்டாள்... மட்டுமல்ல முரடு... என்பதும் தெரிந்து விட்டது. வாரும் போகலாம் என்று கூறி தன் ஒப்பனை அறைக்கு அழைத்துச் சென்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்சார நாற்காலி தண்டனை எனக்கே விதிக்கப்பட வேண்டும்

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

**யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் எவரேனும் மின்சார நாற்காலியில் அமர்த்தப்பட்டால் அந்த நபர் நானாக இருக்கும் என முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

யுத்த களத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறக் கூடிய நபர்கள் இருக்கின்றார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் அமர்ந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் யுத்த களத்திற்கு பொறுப்பு சொல்ல முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து மின்சார நாற்காலியில் அமர வைத்து தண்டிக்கப்பட்டால், அந்தத் தண்டனை எனக்கே விதிக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். யுத்த களத்தின் சகலவிதமான உத்தரவுகளையும் பிறப்பித்து, யத்த கள நிலவரங்களை கண்காணிக்கும் பொறுப்புக்களை தாமே வகித்ததாகத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்திற்கு தலைமை ஏற்று வழிநடத்தும் எல்லா சந்தர்ப்பங்களிலும் துப்பாக்கிச் சூடு நடத்தவும் கொல்லவும் உத்தரவு பிறப்பிக்கப்படுவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நிர்வாகம், முகாமைத்துவம், கணக்கீடு, மனித வளம், நலன்புரி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும், இராணுவத் தளபதி என்ற ரீதியில் இந்த அனைத்து விடயங்கள் பற்றி புரிந்து இருப்பது அவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் தெரிவின் போது மிகுந்த கவனத்தடன் வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். மக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றக் கூடியவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க வேண்டியதில்லை எனவும் அதில் காணப்படும் பாதகமான அதிகாரங்கள் இரத்து செய்யப்பட வேண்டும்.

இராணுவத் தளபதிகளினால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

அமெரிக்காவிலும் இராணுவத் தளபதி நாட்டை ஆட்சி செய்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை பயன்படுத்தி மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலை வெற்றியீட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவா அமர்வுகளை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திக்கொள்ளவே அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தம் நிறைவடைந்து இரண்டு வாரங்களின் பின்னர் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் அளித்த வாக்குறுதி களே தற்போதைய நிலைமைக்கான காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள், நல்லிணக்கம் மற்றும் குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என பான் கீ மூனிடம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாக்குறுதி அளித்ததடன் உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட்டதாகத் தெரிவித்துள்ளார். இராணுவத்திற்கு எதிராக யுத்தக் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டால் எந்த நேரத்திலும் அதற்கு பதிலளிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏதேனும் குறிப்பிட்ட முறைப்பாடு செய்யப்பட்டு ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டால் அவை தொடர்பில் நம்பகமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டியதில்லை என்பதே தமது நிலைப்பாடு எனவும், எனினும், விசாரணைகள் நடத்தப்படும் வரையில் சர்வதேச சமூகம் ஓயப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமையை பாதுகாக்க அரசாங்கம் முதலாவதாக நடவடிக்கை எடுக்கை வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டை சீர்குலைக்க எவருக்கும் அனுமதியளிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2)



சுழிபுரம் பெரிய அரசடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்திற்கு புதிதாக வழங்கப்பட்ட மணியை வலி.மேற்கு முன்னாள் பிரதேச சபை தலைவர் ந.திருலோகநாதன் சம்பிரதாய பூர்வமாக ஆலயத்திற்கு வழங்குவதை படத்தில் காணலாம்.

## மனிதவுரிமைகள் தொடர்பில் பாடப்புத்தகம் விநியோகம்

மனிதவுரிமைகள் தொடர்பில் பாடப் புத்தகங்களை அச்சிட்டு பாடசாலைகளுக்கு விநியோகம் செய்ய இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மேலதிக வாசிப்புப் புத்தகமாக இது வெளியிடப்படவுள்ளது.

மனிதவுரிமை தொடர்பிலான இந்த பாடப் புத்தகங்கள் சகல பாடசாலைகளுக்கும் விநியோகம் செய்யப்படவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளரது ஆலோசனைக்கு அமைய நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இந்த நூல் எழுதப்படவுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதி துணை வேந்தர் பேராசிரியர் பிரேமகுமார டி சில்வா உள்ளிட்ட புத்திஜீவிகளினால் இந்த நூல் எழுதப்படவுள்ளது.

தரம் ஐந்துக்கு மேல் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு இந்தப் புத்தகம் வழங்கப்படவுள்ளது.

எதிர்காலத்தில் ஆரம்ப பாடசாலை மாணவ மாணவியருக்கும் மனிதவுரிமைகள் குறித்த புத்தகமொன்றை விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (2)

## இராணுவ முகாம்களை சிறைச்சாலைகளாக பயன்படுத்த அரசாங்கம் தீர்மானம்

நாட்டின் இராணுவ முகாம்களை சிறைச்சாலைகளாக பயன்படுத்திக் கொளள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சகல இராணுவ முகாம்களையும் சிறைச்சாலையாக பயன்படுத்தக் கூடிய வகையில் அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிவில் சட்டத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பொலிஸாருக்கே வழங்கப்பட வேண்டும்.

அரசாங்கத்திற்கு எதிராக கருத்து வெளியிடும் உரிமை இல்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் இது வரையில் செய்தி ஆசிரியர்கள் உள்ளிட்ட 26 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதுடன் பலர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் உழைக்கும் பணம் கடன் மற்றும் வட்டி செலுத்தவே போதுமானதாக இல்லை.

மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

## ஐ.தே.கவினர் விஷத்தை உண்டு செத்து மடிவர்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

நடைபெறவிருக்கும் மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நிறைவடைந்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி விஷத்தை சாப்பிட்டு செத்து மடிய வேண்டிய நிலைமை ஏற்படப்போவதாக அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் புதன்கிழமை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகளின் பின்னர் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பி. ஹரிசன் எழுப்பிய கேள்வியின் போது இருவருக்குமிடையே சுவாரஸ்யமான வாதம் இடம்பெற்றது.

கேள்வி எழுப்பிய ஹரிசன் எம்.பி. அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தார்.

இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர ஐக்கிய தேசியக்கட்சி செய்தது போன்று எமது அரசாங்கம் ஒரு போதும் மக்களை பாகற்காய் சாப்பிட வைக்காது எனக் கூறினார்.

இந்நிலையில் குறுக்கிட்ட ஹரிசன் எம்.பி பாகற்காய் சாப்பிடாவிட்டாலும் விஷக்கிழங்கை சாப்பிட வைத்து மக்களை நீங்கள் கொல்வீர்கள் எனக் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மஹிந்த அமரவீர மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இடம்பெறவிருக்கின்றன.

அந்தத் தேர்தல்கள் முடிவடைந்ததும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் விஷக்கிழங்கை சாப்பிட்டு செத்து மடிவார்களே தவிர நாட்டு மக்களுக்கு ஒரு போதும் அவ்வாறான நிலைமையை ஏற்படாது என்றார். (2-9)

## வாகனங்களுக்கு விசேட இலக்கங்கள் பெறுவதற்கான கட்டணங்கள் குறைப்பு

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு விசேட இலக்கங்களை பெற்றுக் கொள்வதற்கான கட்டணங்களை குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய விசேட இலக்கங்களை பெற்றுக்கொள்வதற்காக 50 ஆயிரம் தொடக்கம் 70 ஆயிரம் வரை பெறப்பட்ட கட்டணங்களை 6 ஆயிரம் ரூபா தொடக்கம் 10 ஆயிரம் வரை பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போக்குவரத்து அமைச்சர் மேலும் விபரிக்கையில், பஸ், லொறி போன்ற கனரக வாகனங்கள் தொடக்கம் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி போன்ற இலகுரக வாகனங்கள் வரை விசேட இலக்கங்களை பெற்றுக் கொள்வதாயின் 50 ஆயிரம் ரூபா தொடக்கம் 70 ஆயிரம் ரூபா வரையிலான ஒரே தொகையே மோட்டார் போக்குவரத்து திணைக்கள தினால் அறவிடப்பட்டு வந்தது.

கனரக வாகனம் தொடக்கம் இலகு வாகனம் வரையிலான சகல வாகனங்களு க்கும் ஒரே தொகை, கட்டணங்கள் அறவிடப்படுவ தானது அநீதியான ஒன்றாகும் என்பதை கருத்திற் கொண்டே மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளை பயன்படுத்து பவர் களின் நலன் கருதி அரசாங்கம் கட்டணதை குறைக்க தீர்மானித்தது.

இதற்கமைய முதல் 10 ஆயிரம் இலக்கத்தை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 50 ஆயிரம் ரூபா வுக்கு பதிலாக 6 ஆயிரம் ரூபாவை யும, முதல் 20 ஆயிரம் இலக்க த்தை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 60 ஆயிரம் ரூபாவுக்கு பதிலாக 8 ஆயிரம ரூபாவையும் முதல்30 ஆயிரம் ரூபாவுக்கு பதிலாக 8 ஆயிரம் ரூபாவையும், முதல் 30 ஆயிரம் இலக்க த்தை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 70 ஆயிரம் ரூபாவுக்கு பதிலாக 10 ஆயிரம் ரூபாவையும் கட்டணங்க ளாக செலுத்த முடியும் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் மழுங்கடிக்கப்பட்டு நாட்டில் சர்வாதிகார ஆட்சி

## மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி

(கொழும்பு)

**மேல் மாகாண சபை தேர்தலில் அரசாங்கத்திற்கோ அல்லது அரசாங்கத்தில் உள்ளவர்களுக்கோ (முஸ்லிம்) மக்கள் வாக்களிப்பார்களானால் அது பள்ளியை உடைப்பதற்கு சமமான ஹராம் நடவடிக்கை ஆகும் என்று மத்திய மாகாண சபை உறுப்பினர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.**

நடைபெறவுள்ள மேல் மாகாண சபை தேர்தலில் மனோ கணேசனையோ முஜிபுர் ரகுமானையோ விக்கிரமபாகு கருணாரட்னவையோ ஆதரியுங்கள் மாறாக அரசுடன் அங்கம் வகித்துக் கொணடு பள்ளிகளை உடைக்கும் அராஜக சக்திகளுக்கு வாக்களிக்காதீர்கள். இது ஹராமுக்கு சமமான செயலாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதிகாரத்தினை பகிர்ந்து நாடடை ஐக்கியப்படுத்தி நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேசத்திடம் பொய்யான முகமூடியை அணிந்து கொண்டுள்ள அரசாங்கம் உள்நாட்டில் கோயில், கிறிஸ்தவ திருச்சபை, பள்ளி என்று சிறுபான்மையினர்களின் மத தலங்களை உடைக்கின்றன.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஜனாதிபதி பங்கேற்ற போது இலங்கையில் பள்ளிகள் உடைக்கப்படுவது தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டன. அதற்கு பதிலளித்த ஜனாதிபதி இலங்கையில் அப்படி எதுவும் நடந்தது இல்லை. அது பொய்யான தகவல் என்றார். ஆனால் நேற்று முன்தினம் கூட கடவத்தை வீதியில் உள்ள பள்ளி வாசலில் தொழுவதற்கு நீதிமன்றில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் பள்ளிவாசல், கோவில், திருச்சபை போன்ற சிறுபான்மை இன மக்களின் மத தலங்களில் தெய்வ வழிபாடு தான் நடத்துகிறோமே ஒழிய கஞ்சா, அபின், கசினோ சூதாட்டம் எதுவும் நடத்தப்படவில்லை. இந்த நாட்டில் கஞ்சா கடத்துபவர்கள், குடு வியாபாரம் செய்பவர்கள் எல்லோரும் சுதந்திரமாக வாழ்கின்றனர். ஆனால எமக்கு, சிறுபான்மை மக்களுக்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்வதற்கு கூட சுதந்திரம் இல்லை. நாம் பள்ளியில் தெய்வத்தின் ஆசீர்வாதம் வேண்டி பிரார்த்தனை மட்டுமே செய்கிறோமே தவிர அங்கு கஞ்சா வியாபாரம் செய்யவில்லை.

ஆனால் தொடர்ந்து பள்ளிவாசல்கள் உடைக்கப்படுகின்றன, மூடப்படுகின்றன. அதற்கு சட்டமும் நீதியும் கூட ஆதரவாக உள்ளமை என்பது வேதனை அளிக்கிறது.

ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் ஆதரவுடனையே சிறுபான்மை மக்களுக்கு எதிரான வன்முறைகள் இடம்பெறுகின்றன. பள்ளிகள் உடைக்கப்படுகின்றன. இந்த தருணத்தில் அரசுடன் கூட்டு வைத்துக் கொண்டு அரசியல் இலாபத்திற்காக செயற்படுபவர்களுக்கு நாம் ஆதரவு நல்கினால் அது பள்ளிவாசலை உடைப்பதற்கு கல் எடுத்து கொடுப்பவர்களை ஆதரிப்பது போன்றதாகும். இதனை ஒரு போதும் செய்யக் கூடாது. மாறாக சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் இன, மத பேதமற்று குரல் கொடுக்கின்ற மனோ கணேசன், முஜிபுர் ரகுமான், விக்கிரமபாகு கருணாரட்ன ஆகியோருக்கு வாக்களித்து சிறுபான்மை மக்களின் பலத்தை உறுதிப்படுத்தவேண்டும்.

யுத்தம் முடிந்து விட்டது. நாட்டில் எல்லோரும் சமாதானமாக, சந்தோஷமாக வாழ்வதாக அரசாங்கம் தெரிவிக்கிறது. ஆனால் நேற்று முன்தினம் கூட நுகேகொடையில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுளளது. ஒவ்வொரு நாளும் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்து செல்கின்றன. நாட்டின் ஜனநாயகம் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் சர்வாதிகார ஆட்சியை நோக்கியே நாம் பயணிக்கிறோம் என்றார். (அ-2)

# மன்மோகன் சிங் நேரடியாக தலையிட வேண்டும்-ஜெயா


இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்க பிரதமர் மன்மோகன் சிங் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா மீண்டும வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக பிரதமருக்கு அவர எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் இலங்கை கடற்படையினர் தொடர்ந்து சிறைபிடித்துச் செல்வது தமக்கு மிகுந்த வேதனையை தருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 13 ஆம் திகதி கொழும்பில் இருநாட்டு மீனவர்களிடையே பேச்சுவார்த்தை நடைபெறவுள்ள நிலையில், அதற்கு முன்னதாக தமிழக மீனவர்களையும் அவர்களின் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 3 ஆம் திகதி, பாரம்பரியமாக மீன்பிடிக்கும் பாக்கு நீரிணை பகுதியில், 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம் தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள 153 மீனவர்களையும் 39 மீன்பிடி படகுகளையும் விரைவில் விடுவிக்க தூதரக அளவில் உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும என்றும், இந்த விவகாரத்தில் பிரதமர் நேரடியாகத் தலையிட்டு தீர்வுகாண வேண்டும் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)




நெல்லியடி லயன்ஸ் கழகத்தினரால் யா/அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 25 வறிய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்ட போது...

# இந்திய மீனவர்கள் 15 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 15 பேர் நேற்று முன்தினம் அதிகாலை மன்னார் பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் உதவித் துணைத்தூதுவர் எஸ்.தட்சணா மூர்த்தி தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்த 15 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். அதேவேளை அவர்களின் மூன்று படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அதேவேளை கைது செய்யப்பட்ட மீனவர்கள் 15 பேரும் இன்று மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் 32 பேரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின் குமார் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் நாகப்பட்டினம், ஜகதாப்பட்டினம் ஆகிய பகுதிகளிலிருந்து 8 படகுகளில் வந்த மேற்படி 32 இந்திய மீனவர்களையும் காங்கேசன்துறை கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை இரவு கைதுசெய்து யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி இந்திய மீனவர்கள் 32 பேரும் ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

# சர்வதேச ரீதியிலான விசாரணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும்

## பிரித்தானிய தமிழர் பேரவை

(கொழும்பு)

ஜெனீவா மனிதவுரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான பிரேரணையின் நகல் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், இலங்கைத் தமிழர்கள் மாத்திரமல்லாமல் மனிதவுரிமைகளுக்காக சர்வதேச அளவில் குரல் கொடுத்து வரும் குழுக்களும் ஆர்வலர்களும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என ஆரம்பம் முதல் சர்வதேச ரீதியாக பரந்து வாழும் தமிழர்களின் சார்பில் ஒருமித்த குரலினை எழுப்பி வரும் பிரித்தானிய தமிழர் பேரவை இது தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்ட நிலையில், அனைவரும் ஒன்றிணைந்து தமிழர் விடயத்தில் ஆக்கபூர்வமாக செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக பிரித்தானிய தமிழர் பேரவையின் மனிதவுரிமைகள் செயற்பாட்டுப் பிரிவின் ஒரு பகுதியினர், ஜெனீவாவில் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை நடைபெற்றுவரும் அதேவேளை, மறுமுனையில் இந்தியாவிலும் பலதரப்பட்ட அரசியல் கட்சி உறுப்பினர்கள் மற்றும் மனிதவுரிமைகள் - சமூக ஆர்வலர்களுடனும் கலந்துரையாடல்களிலும் பேச்சுக்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்றைய தினம இந்தியாவின் முன்னணி சமூக ஆர்வலர் மற்றும் மனிதவுரிமை செயற்பாட்டாளரான மேதா பட்கர் பர்வின்னுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்ட பிரித்தானிய தமிழர் பேரவையின் மனிதவுரிமை செயற்பாட்டு உறுப்பினர்கள், அதன் தொடர்ச்சியாக அரசியல் பிரமுகர்களை சந்தித்து தமிழர்கள் சார்பாக தமது கருத்துக்களை வலியுறுத்தி தமிழர் பால் இந்தியாவினை வென்றெடுக்க முனைப்புக் காட்டி வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக இந்திய கம்யூனிஸ்கட்சியின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் மற்றும் உறுப்பினரான டி.ராஜா ஆகியோருடன் சந்திப்பை மேற்கொண்டுள்ளனர். இதனைத் தொடர்ந்து பலகட்டப் பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன. (அ-2)

# இந்திய மீனவர்களின் 9 படகுகள் விடுவிப்பு


காங்கேசன்துறை துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் 9 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபரின் பணிப்புரைக்கு அமைய ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதிபதி செல்வநாயகம் லெனின்குமாரால், படகுகளை விடுவிப்பதற்கான உத்தரவு நேற்று முன்தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ள படகுகளை, சட்டரீதியாக இந்திய மீனவர்களிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்து, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் இந்தப் படகுகள் கைப்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி.மு.க. வரலாற்றின் அடுத்த அத்தியாயம் ஸ்டாலின்: கருணாநிதி



தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலினின் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் இந்த முறை தி.மு.கவை அடுத்து அவர்தான் தலைமை தாங்கப் போகும் சக்தி என்பதை பறைசாற்றியிருக்கிறது. சென்னை மாநகரில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தி.மு.க. தொண்டர்கள் தமிழகம் முழுவதும் இருந்து வந்து வரிசையில் நின்று ஸ்டாலினை வாழ்த்தியது, அவரது பாப்புலாரிட்டியைப் படம் பிடித்துக் காட்டுகிறது. அதுமட்டுமின்றி கூட்டணிக் கட்சித் தலைவர்கள் எல்லாமே ஸ்டாலினுக்கு வாழ்த்துச் சொல்லியிருக்கிறார்கள். 65 ஆண்டு கால தி.மு.க. வரலாற்றில் இந்தக் கட்சிக்கு முதலில் அறிஞர் அண்ணா, பிறகு கலைஞர் கருணாநிதி என்று சமூக நீதிக்கொள்கைகளுக்கான போராட்டக் களம் மிகுந்த கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் தமிழக அரசியலில் இருந்து வந்துள்ளதை அரசியல் அரிச்சுவடி படிக்கும் அனைவரும் அறிந்திருக்க முடியும். அந்த தி.மு.கவிற்கு இப்போது மு.க.ஸ்டாலின் தலைமைப் பொறுப்பு என்ற படிக்கட்டின் இறுதிப் படியில் வந்து நிற்கிறார்.

தி.மு.க. தோற்றுவிக்கப்பட்ட பிறகு ஈ.வி.கே. சம்பத், எம்.ஜி.ஆர், வைகோ இப்படி பலரால் அந்தக் கட்சிக்கு சோதனை ஏற்பட்டது. இந்த பிளவுகள், கட்சிக்குள் கோஷ்டிகள் தலை தூக்கிய போதெல்லாமே தி.மு.க. இனி தேறாது என்றே பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதையெல்லாம் தாண்டி கட்சி வந்த போது தான் தி.மு.கவிற்குள் ஸ்டாலினுக்குப் போட்டியாக அழகிரி அணி, தயாநிதி மாறன் அணி, கனிமொழி அணி எல்லாம் களை கட்டியது. ஆனாலும் கட்சியின் பெருவாரியான பலம் தி.மு.கவிற்குள் ஸ்டாலின் அணிக்கு மட்டுமே இருந்து வந்திருக்கிறது.

குறிப்பாக 2009 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அமைச்சரவையில் இரண்டாவது முறையாக பதவியேற்ற தி.மு.கவிற்கு யாருக்கு அமைச்சர் பதவி என்பதில் பிரச்சினை ஏற்பட்டது. ஆனாலும் கனிமொழிக்கு அமைச்சர் பதவியை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. ஆனால், தயாநிதி மாறனும், அழகிரியும் மத்திய அமைச்சர்களானார்கள். இந்த அமைச்சர் பட்டியலை காங்கிரஸ் ஏற்பதில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு கனிமொழியையும் ராஜாவையும் சிறையில் தள்ளும் அளவிற்கு போனது என்பது வேறுகதை. இப்படி டெல்லி அதிகாரத்தில் மையம் கொண்ட அழகிரி, தயாநிதி போன்றவர்களுக்கு தமிழக அரசியலிலும் தனி மோகம்.

அதனால் தி.மு.கவிற்குள் இருக்கும் பல்வேறு தரப்பட்ட கட்சி நிர்வாகிகள் மத்தியில் இருவரும் போட்டி போட்டுக்கொண்டு அதிகாரம் செலுத்த முற்பட்டார்கள். தனக்கு தி.மு.கவில் ஏகோபித்த ஆதரவு இருக்கிறது என்பது போல் கலாநிதி மாறன் தரப்பு நடத்திய தினப்பத்திரிகையில் சர்வே ஒன்றைப் போட்டு அதனால் தி.மு.கவிற்குள் ரணகளம் உருவானது. அதனால் அந்த பத்திரிகையின் அலுவலகம் மதுரையில் அழகிரியின் ஆதரவாளர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு தி.மு.கவிற்குள் நடக்கும் கோஷ்டி அரசியல் பட்டவெளிச்சமானது. இப்படிப்பட்ட நேரத்தில் தான் தயாநிதி மாறனை விலக்கி வைக்கவேண்டிய நிர்ப்பந்தமே தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு ஏற்பட்டது. அந்த நேரத்தில் அவைக்கு வந்தவர்தான் கனிமொழி.

ஆகவே, அந்த காலகட்டத்தில் தி.மு.கவில் ஸ்டாலினுக்குப் போட்டியாக கனிமொழியும், மு.க.அழகிரியும் எஞ்சி நின்றார்கள். ஆனாலும் கட்சிக்குள் உள்ள 95 சதவீதம் பேர் ஆதரவு ஸ்டாலினுக்கு என்றால் மீதியுள்ள 5 சதவீதம் பேரின் ஆதரவுதான் இந்த இருவருக்குமே இருக்கும். இதுதான் தி.மு.கவின் நிலையாக இருந்தது. இது போன்ற சூழ்நிலையில் 2011 சட்டமன்றத் தேர்தல். மாநிலத்தில் தி.மு.க. ஆட்சியை இழந்தது. அதிலும் குறிப்பாக மதுரை மற்றும் மதுரையைச் சுற்றியுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்கள் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தார்கள். மு.க. அழகிரியை மையப் படுத்தியே மதுரை பகுதியில் அ.தி.மு.க பொதுச் செயலாளர் தீவிர பிரசாரம் மேற்கொண்டது ஓர் அதி முக்கிய காரணம். குறிப்பாக சொன்னப்போனால் மதுரை வடக்கு (46400 வாக்குகள் வித்தியாசம்), மதுரை தெற்கு (45451 வாக்குகள் வித்தியாசம்) திருப்பரங்குன்றம் (45502 வாக்குகள் வித்தியாசம்) போன்ற தொகுதிகளில் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்கள் படுமோசமான வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைச் சந்தித்தார்கள்.

சட்டமன்றத் தேர்தலில் இப்படிக் கிடைத்த தோல்வி மு.க. அழகிரிக்கு சோதனையை உருவாக்கியது. கட்சிக்குள் அவர் செல்வாக்கு இழந்த தலைவர் என்ற தோற்றத்தை உருவாக்கியது. அவரை நம்பியிருந்த தென்மாவட்ட கட்சியினர் அவரை எதிர்த்து மதுரையில் நடைபெற்ற ஊழியர்கள் கூட்டத்திலேயே பேசும் அளவிற்கு நிலைமை முற்றியது. இந்த தோல்வியில் அவரது ஆதரவாளர்கள் துவண்டு போனார்களோ இல்லையோ அழகிரியே துவண்டு போனார். அ.தி.மு.க. அரசு பதவியேற்றதும் பெரிய அளவில் களத்தில் இறங்கி போராட வேண்டும் என்ற துணிவு அவருக்கு வரவில்லை. அந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டவர் மு.க. ஸ்டாலின். அ.தி.மு.க.அரசை எதிர்த்து, அந்த அரசால் தி.மு.கவினர் எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்த்து போராட்டம், மறியல் எல்லாவற்றிலும் ஸ்டாலின் முன்னணி வகித்தார். திருவாரூரில் அவருடன் காரில் வந்த மாவட்டச் செயலாளர் ஒருவரை கைது செய்ய நடுரோட்டில் அங்கேயே ஸ்டாலின் சாலை மறியலில் இறங்கி கைதானார். அது ப்ளாஷ் செய்திபோல் பரவ, தமிழகம் முழுவதுமே தேர்தல் தோல்வியால் சோகத்தில் இருந்த தி.மு.கவை வீறுகொண்டு எழ வைத்தது. அன்றுதான் தி.மு.கவின் அடுத்த தலைவர் ஸ்டாலின்தான் வேறு எவரும் இல்லை என்பதை தமிழகம் முழுவதும் உள்ள தி.மு.க. தொண்டர்கள் தலைமைக்கு [illegible] ர்த்தினார்கள் என்றால் மிகையாகாது.

கட்சிக்குள் ஸ்டாலின், அழகிரி, கனிமொழி என்ற மூவரணி இருந்தாலும், அதிலே முதன்மை பெற்றது ஸ்டாலின்தான் என்பது நிரூபணம் ஆகிக் கொண்டு வந்தது. அது போன்ற சந்தர்ப்பத்தில் ஸ்டாலின்தான் அடுத்த தலைவர் என்பதை தெளிவாக அறிவிக்க வேண்டும் என்ற அழுத்தம் தி.மு.க. முன்னணித் தலைவர்கள் மூலமே தி.மு.க. தலைவருக்கு வந்தது. அதன் ஒரு கட்டமாகத்தான் எனக்குப் பிறகு சமுதாயப் பணிகளை ஸ்டாலின் கவனிப்பார் என்று முதலில் வெளிப்படுத்தினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. அடுத்து, பொதுக்குழுவில் எனக்கு வாய்ப்பு கிடைத்தால் ஸ்டாலினை தலைமைப் பதவிக்கு முன்மொழிவேன் என்றெல்லாம் தி.மு.க. தொண்டர்களின் எண்ணவோட்டத்திற்கு ஈடு கொடுத்துப்பேசினார் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி.

இதை அழகிரி எதிர்த்துப் பேசத் தொடங்கினார். அங்குதான் அழகிரி தவறு செய்தார். அவர் ஸ்டாலினை எதிர்க்கிறோம் என்று நினைத்துக் கொண்டு கலைஞர் கருணாநிதியின் கருத்திற்கே மாற்றுக் கருத்துச் சொன்னார். தி.மு.கவிற்குள் வரும் இதுபோன்ற பிரச்சினைகளில் எவர் கலைஞர் கருணாநிதிக்கு எதிராக களத்திற்கு வருகிறார்களோ, அவர்கள் தோல்வியைச் சந்திப்பார்கள். அப்படித்தான் எம்.ஜி.ஆருக்கும் நேர்ந்தது. வைகோவிற்கும் நேர்ந்தது. தயாநிதி மாறனுக்கும் நேர்ந்தது. இப்போது அழகிரிக்கும் நேர்ந் திருக்கிறது. எல்லாவற்றையும் விட விஜயகாந்துடன் கூட்டணி வைக்க தி.மு.க. தரப்பில் மூவ்கள் நடந்து கொண்டிருந்த நேரத்தில் விஜயகாந்தை விமர்சித்து பேட்டி கொடுத்தார் அழகிரி. அடுத்து தி.மு.கவின் பொதுக்குழு பற்றியே கிண்டல் அடித்து அவரின் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினார்கள். இது மாதிரி மோதல் போக்கால் அழகிரி தனக்குத் தானே தி.மு.கவின் அதிகாரப் போட்டியில் இருந்து விடை பெறுவதற்கு பாதை அமைத்துக் கொண்டார்.

தி.மு.கவில் இதுபோன்ற கோஷ்டிப் பூசல் தலை தூக்கிய நேரத்தில் ஒருமுறை தி.மு.க. தலைவர் கருணாநிதி, எந்த கோஷ்டியும் தி.மு.கவில் இல்லை. அப்படிக் கோஷ்டிகள் இருந்தாலும் அடக்கக் கூடிய வல்லமையும் வாய்மையும் என்னிடமும், தி.மு.க. தலைவர்களிடத்திலும் இருக்கிறது என்று பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்தார். அதன்படியே கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக மு.க. அழகிரியை தற்காலிக நீக்கம் செய்தார். அதைத் தொடர்ந்து திருச்சியில் தி.மு.கவின் பத்தாவது மாநில மாநாடு. அந்த மாநாட்டில் தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தினார். மாநாட்டு பந்தலில் தி.மு.க. தலைவரின் வயதைக் குறிக்கும் விதத்தில் 90 அடிக் கம்பத்தில் தி.மு.க. கொடி ஏற்றப்பட்டது. அந்தக் கொடியை காரிலிருந்தவாறே முதல் இரு இழுப்புகள் மட்டும் இழுத்துவிட்டு மீதிக் கொடியை கம்பத்தில் ஏற்றும் பொறுப்பை மு.க.ஸ்டாலினிடம் ஒப்படைத்துவிட்டு மேடைக்குப் போனார். மீதி உயரத்தை ஸ்டாலினே கொடியேற்றி தி.மு.க. கொடியை அந்த 90 அடிக் கம்பத்தில் ஸ்டாலின் பறக்கவிட்டார். இதை மாநாட்டில் சுட்டிக்காட்டிய திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி, ஸ்டாலின் மீதிக் கொடியை ஏற்றியதில் அர்த்தம் இருக்கிறது என்று சுட்டிக்காட்டினார். தி.மு.கவின் கொடியேற்றும் தலைமைப் பதவி ஸ்டாலினுக்கே அடுத்து கிடைக்கும் என்பதை நினைவுபடுத்தும் நிகழ்ச்சி இது என்பது வீரமணி போன்றவர்களின் கணிப்பு.

இந்நிலையில் தி.மு.கவிற்குள் இப்போது ஸ்டாலினுக்குப் போட்டியாக எஞ்சியிருப்பது கனிமொழி அணி மட்டுமே. ஆனால், அது ஸ்டாலினுக்கு உள்ள ஆதரவு கட்சிக்குள் மலையளவு என்றால், கனிமொழிக்கு உள்ள ஆதரவு கடுகு அளவுதான் என்றே ஒரு தி.மு.க. மூத்த கட்சி நிர்வாகி ஒருவர் கமெண்ட் அடித்தார். அந்த அளவிற்கு இப்போது தி.மு.கவின் ஒரே அடுத்த தலைவர் மு.க.ஸ்டாலின் என்பது அரங்கேற்றத்திற்கு வந்துவிட்டது. அதன் எதிரொலி தான் சமீபத்தில் மார்ச் முதலாம் ஆம் திகதி நடைபெற்ற மு.க.ஸ்டாலினின் 62 ஆவது பிறந்த நாள் விழா எடுத்துக்காட்டியது. தி.மு.கவிற்குள் உள்ள கோஷ்டிகள் மறைந்து, இனி ஸ்டாலின்தான் தி.மு.க. என்ற வரலாற்றின் புதிய அத்தியாயம் மார்ச் முதலாம் ஆம் திகதி ஸ்டாலின் பிறந்த நாள் அன்று ஆரம்பித்துவிட்டது. அதனால்தான் காங்கிரஸ் கூட்டணி வேண்டாம், விஜயகாந்துடன் கூட்டணி இருந்தால் போதும் என்றெல்லாம் தி.மு.கவின் எண்ணவோட்டத்தை உருவகப்படுத்தும் வாய்ப்பு ஸ்டாலினுக்கு கிட்டியிருக்கிறது என்பது தான் மாற்றுக் கட்சித் தலைவர்களின் கருத்தாக அமைந்திருக்கிறது. ஏன் தமிழக முதல்வர் ஜெயலலிதாகூட தமிழகத்தில் தொழில் வளர்ச்சி குறைந்துவிட்டது என்று டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கிலப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஸ்டாலின் குற்றம்சாட்ட, அதற்கு சட்டமன்றத்தில் தனது பட்ஜெட் விவாதத்தில் பதிலளித்துள்ளார்!

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## கற்பித்தல்-கற்றல் நிலைமைகளின் பல்வேறு படிநிலைகளில் பயன்படுத்தப்படும் கற்பித்தல் - கற்றல் முறைமைகள்

ஒரு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டிற்கு சில விடயங்கள் உதவியாகவும் வேறு சில விடயங்கள் இடையூறாகவும் அமையலாம். இவ்விடயங்களை அல்லது மாறிகள் என லாம். இம்மாதிரிகள் மாணவருடைய குண வியல்புகளுடன் சம்பந்தப்பட்ட மாறிகள், பிற மாறிகள் என இரு வகைப்படும். மாணவர்களுடைய குணவியல்புகள் தவிர்ந்த பிற மாறிகள் இங்கு கவனம் செலுத்தப்பட உள்ளது. இப்பிற மாறிகளையும் இரு பிரிவாகக் கருதமுடியும்.

1.பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட மாறிகள்
2.தனிப்பிட்ட வேறுபாடுகளாலான மாறிகள்

கற்பித்தல் - கற்றல் நிலைமையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- மாணவர்களுடைய குணவியல்புகள் தவிர்ந்த பிற மாறிகள்
  - பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட மாறிகள்
  - தனிப்பிட்ட வேறுபாடுகளாலான மாறிகள்
- மாணவருடைய குணவியல்புகளுடன் சம்பந்தப்பட்ட மாறிகள்

பாடத்துறையுடன் சம்பந்தப்பட்ட மாறிகள் எனும்போது பாட உள்ளடக்கம், பாட ஒழுங்கமைப்பு, பாட ஒருங்கிணைப்பு, பாடம் கற்பிக்கும் முறை என்பன கருத்தில் கொள்ளப்படும். தனிப்பட்ட வேறுபாடுகளை மாறிகள் எனும் போது வயது, இயலுமை, கற்றல் பாங்கு, சமூகப் பொருளாதார பின்னணி, ஊக்கல், வகுப்பறைக் கவின் நிலை, கல்வியியலாளரது நடத்தையும் அவரின் கற்பித்தல் பாங்கும், கல்வியியற் கல்லூரியின் வளங்கள், கல்லூரியின் தலைமைத்துவம், குடும்பப் பின்னணி, சமூக இடப்பெயர்ச்சி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### 1. உள்ளடக்கம் (Content)

பாட உள்ளடக்கம் அடிப்படை அமைந்திருந்தால் கற்றலும் இலகு கற்பித்தலும் இலகு. இதில் ஓர் ஒழுங்கற்ற படிமுறை காணப்படின் கற்பிப்பதும் கடினம். கற்பதும் கடினம். எனவே வளர்ந்த ஆசிரிய மாணவரது கற்றலில், பாட உள்ளடக்கம் தெளிவாக ஒழுங்காக இருந்தால் இலகுவாக நடைபெறும்.

### 2.பாட ஒழுங்கமைப்பு (Sequence)

ஆசிரிய மாணவர்களைப் பொறுத்தவரை அடிப்படை விடயங்கள் 1ம் வருடத்திலும் மேலதிக விடயங்கள் 2ம் வருடத்திலும் இடம்பெற வேண்டும். அதாவது இங்கு தொழில் முன்னிலைப் பாடங்களுக்கு முதலிடம் கொடுத்து அதன்பின் துறைப் பாடங்கள் இடம்பெற வேண்டும். இவ் ஒழுங்கமைப்பு இருந்தாலே கற்றல் - கற்பித்தல் செயற்பாடு எவ்வித இடையூறுகளுமின்றி சுமுகமாகச் செல்லும்.

### 3. பாட ஒருங்கிணைப்பு (Integration)

*தொழில் முன்னிலைப் பாடங்களுக்கு முதலிடம்*

ஒரு பாடமானது படிப்படியாக முன்னேறிச் செல்லும் அதேவேளை மற்றைய பாடங்களுடன் தொடர்புபடுத்தப்படவும் வேண்டும். அதாவது ஏனைய பாடங்களுடன் சமாந்தரமான ஒரு கிடைத்தொடர்பு இருந்தால் தான் கற்றல் முழுமையடையும். உதாரணத்திற்கு கண்ட ஒட்டு நகர்வு பற்றி புவியியல் பாடத்தில் கற்றல், அது ஏற்படுவதற்கான காரணம் அதே சமாந்தர வகுப்புக்கான விஞ் ஞான பாடத்தில் இருக்க வேண் டும்.

### 4. பாடம் கற்பிக்கும் முறை (Teaching Method)

கல்வியியற் கல்லூரி களைச் சேர்ந்த வளர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கு குழுக்கற்றலும் பிரச்சினை தீர்க்கும் முறையும் பெருமளவு பயன ளிக்கும். இவர்கள் அனுபவங்களினூடாகவே கற்க விரும்புவதால் விரிவுரை முறையை அதிகம் விரும்புவதில்லை. அனுபவக் கற்றலுக்கான கற் பித் தற் பயிற்சி (Block Tea ching), உள்ளகப் பயிற்சி (In ternship) போன்றவற்றில் இவர் களை ஈடுடுத்தும்போது ஒரு நல் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய சிறந்தபண்புகளை இவர்கள்இலகுவில் தமதாக்கிக் கொள்கின்றனர்.

### 5.வயது (Age)

கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டில் வயதும் ஓர் முக்கிய மாறியாக உள்ளது. இங்கு நாம் கருத்தில் கொள்வது ஆசிரிய மாணவர்களா தலால், அதாவது 19 தொடக்கம் 22 வயதுக்கு உட்பட்டவர்களாதலால் இவர்கள் செய்மு றையுடன் கூடிய அனுபவக் கற்றலையே பெரிதும் விரும்புவர். இதற்காக கற்பித்தல் பயிற்சி (Block Teaching), உள்ளகப் பயிற்சி (Internship) போன்றவற்றில் இவர்களை ஈடுபடுத்தினால் கற்றல் உச்சமாக நிகழும்.

### 6. இயலுமை (Ability)

**ஆசிரிய மாணவர்கள் துடிப்பு மிக்கவர்கள்**

ஒருவரது கற்கும் ஆற்றல் வயது மட்டத்துக்கேற்ப வேறுபடும். ஆசிரிய மாணவர்கள் துடிப்புமிக்க வயதுப்பிரிவில் (18 - 22) இருப்பால் அவர்களின் தேவைக்கேற்ப தீனி, கல்வியியற் கல்லூரிகளால் வழங்கப்பட வேண்டும். அவர்களது இயலுமைக்கு ஏற்றவாறு கற்றல் அனுபவங்கள், கற்பித்தல் உத்திகள், கற்பிப்பதற்கான வளங்கள், கற்பிப்பதற்கான சூழல் என்பன ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

### 7.கற்றல் பாங்கு (Learning Style)


மாணவனுக்கு மாணவன் கற்றல் பாங்குகள் வேறுபடும். ஒரு சில ஆசிரிய மாணவர்கள் பிரச்சினை தீர்க்கும் முறையில் கற்க விரும்பும் அதேவேளை இன்னொருசாரார் கண்டுபிடித்துக் கற்கும் முறையை விரும்பலாம். எனவே இவ் ஆசிரிய மாணவர்கள் விரும்பும் கற்றல் பாங்கை விரிவுரையாளர் அறிந்து அதற்கேற்றவாறு தனது கற்பித்தல் உத்திகளை தெரிவு செய்ய வேண்டும்.

### 8.சமூகப் பொருளாதாரப் பின்னணி (SocialEconomic Backgroun d)

பல்வேறு சமூக பொருளாதார பின்னணிகளிலிருந்தும் ஆசிரிய மாணவர்கள் கல்லூரிகளுக்கு வந்திருப்பர். ஒருசிலர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களிலிருந்தும் வேறு சிலர் நடுத்தர வர்க்க குடும்பங்களிலும் வேறு ஒரு சிலர் உயர்தர வ்ர்க்க குடும்பங்களிலிருந்தும் வந்திருப்பர். இவை அவர்களது கற்றல் செயற்பாட்டில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். வறுமைக் கோட்டுக்குக் கீழிருந்து வந்தவர் ஒரு தொழிலை அடைய வேண்டும் எனும் நோக்கத்திலும், உயர்தர வர்க்கத்திலிருந்து வந்தவர் பொழுது போக்கிற்காகவும் வந்திருக்கலாம்.

### 9.ஊக்கல் (Motivation)

ஊக்கலை அகஊக்கல், பிறஊக்கல் என இரு வகைப்படுத்தலாம். அக ஊக்கல் மாண வரது கற்றல் குணவியல்புகளுடன் தொடர்புபட்டது. ஆனால் பிற ஊக்கல் எனும் போது அதை கற்றலுக்கான பிற ஊக்கல், கற்பித்தலு க்கான பிற ஊக்கல் என இரு வகைப்படுத்தலாம். கற்றலுக்கான பிற ஊக்கல் எனும் போது வெகுமதி வழங்கல், பாராட்டுதல், தண்டனை என்பவ




ற்றை குறிப்பிடலாம். அவ்வாறே கற்பித்தலுக்கான பிற ஊக்கலாக அதிபரின் பாராட்டு, சமூகப் பெறுமானம், கிடைத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஒரு மாணவனை நன்றாக கற்பித்து சிறந்த பெறுபேற்றை பெறவைத்தால் அவ் விரி வுரை யாளருக்கு நிறுவன தலைவராலும், சமூக த்தாலும் பாராட்டுக் கிடைக்கும். அத்துடன் சிறந்த ஒரு கல்வியியலாளர் எனும் சமூக அந்தஸ்தும் கிடைக்கும். இவை கற்பித்தலில் செல் வாக்குச் செலுத்தும் மாறிகளாக உள்ளன.

### 10. வகுப்பறைக்கவின் நிலை (Social Climate in the classroom)

ஒரு வகுப்பறைச் சூழல் நன்றாக இருந்தால் தான் கற்றல், கற்பித்தல் ஆகிய இரு செயற்பாடுகளும் செவ்வனே நடைபெறும். வகுப்பறையானது நல்ல காற்றோட்டமுள்ளதாக, போதிய வெளிச்சமுள்ளதாக, போதிய ளவு தளபாட வசதியுள்ளதாக அமைய வேண்டும். அத்துடன் கவனக் கணிப்பானை ஏற்படுத்தும் வகையில் மைதானத்துக்கு அருகிலோ, அல்லது வீதிக்கு அருகிலோ இருத்தல் கூடாது. மூடிய வகுப்பறையாக இருப்பது விரும்பத்தக்கது. மேலும் மற்றைய வகுப்புக்களால் சத்தம், வீதியால் செல்லும் வாகனங்களின் இரைச்சல் போன்றன அற்றதாக வகுப்பறைச் சூழல் காணப்பட வேண்டும்.

### 11.கல்வியியலாளரது நடத்தையும் அவரின் கற்பித்தல் பாங்கும். (Lecture behavior and teaching style)

கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர், ஆசிரிய மாணவர்களுடன் சிறந்த இடைவிளையுறவைக் கொண்டிருக்க வேண்டும். இவர்கள் வளர்ந்த மாணவர்களாதலில் அவர்களை அடிமை போல் நடத்தாது சினேகபூர்வமான முறையில் கற்பித்தற் செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டும். வளர்ந்த ஆசிரிய மாணவர்கள் தங்கள் சுயகௌரவத்தை பெரிதும் விரும்புவார்கள். எனவே அவர்களின் சுயகௌரவத்துக்கு பங்கம் ஏற்படாதவாறு கல்வியியலாளர் நடந்து கொள்ள வேண்டும். தண்டனை வழங்குவதையும் இவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்களாதலில், அவர்களுக்கேற்ற பொருத்தமாக கற்பித்தல் உத்திகளை கையாள வேண்டும். உதாரணத்துக்கு ஆசிரிய மாணவர்களைக் கூடியளவு தொழிற்பட விடவேண்டும்.

**வகுப்பறைச் சூழல் நன்றாக இருந்தால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் செவ்வனே நடைபெறும்.**

### 12. கல்வியியற் கல்லூரிகளில் பௌதீக, மனித வளங்கள் (Physical and human resources)

ஒரு கல்லூரிகளில் வசதிகள் வாய்ப்புக்கள் கூடவாக இருப்பின் அங்கு கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேற்கொள்ளத்தக்க ஓர் கவின்நிலை காணப்படும். கல்லூரியின் வசதி வாய்ப்புக்கள் எனும் போது மனித வளங்களும் பௌதிகவளங்களும் அடங்கும். பௌதிக வளங்கள் எனும் போது தேவையான ஆசிரிய கல்வியியலாளர்கள், நிர்வாகத்திற்குத் தேவையான ஆளணியினர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், விடுதிக்காப்பாளர்கள், சமையலறை உதவியா



ளர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளார்கள் என்பன அடங்கும். இவை அனைத்தும் இருந்தால் தான் கல்லூரிகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு எவ்வித இடையூறுமின்றி நடைபெறும். அதேபோல் தேவையான பௌதீக வளங்களும் அவசியமானதாகும்.

***போதனா தலைமைத்துவம் (Instructional Leader Ship)***

### 13. கல்லூரியின் தலைமைத்துவம் (Leader Ship)

கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டில் முக்கியமாக செல்வாக்குச்செலுத்தும்ஒரு காரணியாக தலை மைத்துவம் விளங்குகின்றது. சிறந்த ஓர் தலை மைத்துவம் உள்ள கல்லூரியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் உன்னத நிலையில் இடம்பெறும். கல்லூரியின் தலைவரிடமிரு ந்து போதனா தலைமைத்துவம் (Instru ctional Leader Ship) எதிர் பார்க்கப்படுகின்றது. போத்னா தலைமைத்துவம் மிக்க ஒரு கல்லூரியின் தலைவர், கற்பிப்பவர்களுக்கு கற்பித்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குபவராகவும், இடையுறுகளை நீக்குபவராகவும் இருப்பர். கல்வியியலாளர்களது தேவைகளும் ஆசிரிய மாணவர்களது தேவைகளும் நிறைவு செய்யப்படுமிடத்து அங்கு ஓர் நிறைவான கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை அவதா னிக்க முடியும்.

### 14. குடும்பப் பின்னணி (Family Background)

பல்வேறு மட்டங்களிலிருந்தும் ஆசிரிய மாணவர்கள் கல்வியியற் கல்லூரிகளுக்கு வருகின்றார்கள். தாழ்மட்டத்திலிருந்து கல்லூரிக்கு தெரிவாகும் ஒரு மாணவனிடம் அவனுடைய குடும்பம் பெரிய ஓர் எதிர்பார்ப் பைக் கொண்டிருக்கும். அதாவது அவர் நன்றாக படித்துமுடித்து ஆசிரிய தொழிலுக்கு சென்று உழைத்து தங்களது குடும்பச்சுமையை தாங்கவேண்டும் என்பதாகும். இவ்வாறு எதிர்பார்ப்புக்களோடு வருபவர்களுக்கு தாம் எப்பாடுபட்டாவது நன்றாக கற்றுத் தேறி ஆசிரியத் தொழிலை பெறவே ண்டும் என்றதோர் உந்துதல் இருக்கும். (தொடரும்)

A.Gugan
BSc.(cey), PGDE, MSc.(Phy of Mat),MATE(International)
Lecturer (SLTES III)
J/National College of Education

## வாரத்திற்கு ஒரு புதிர்! 104

"ஆசிரிய மாணவர்களை சுதந்திரமாகவும் எவ்வித கட்டுப்படுத்தல்களுமின்றிக் கற்பதற்கு ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலம் அவர்களை சுயமாகப் பிரச்சினையை இனங்காணச் செய்து அது தொடர்பான தகவல்களைச் சரியான தகவல் சேகரிப்பு முறைகளைப் பயன்படுத்திச் சேகரிக்கச்செய்து, அவற்றை முறைப்படி பகுப்பாய்விற்கு உட்படுத்திப் பெற்றுக்கொண்ட தீர்வினைப் பயன்படுத்தும் அல்லது பொதுமைப்படுத்தும் திறனை பெற்றுக்கொள்ளச் செய்யலாம்." என்ற கருத்தை முன்வைத்த மூன்று கல்விச் சிந்தனையாளர்களின் பெயர்கள் யாவை?

**புதிர் 104 இற்கான விடைகளை 17.03.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
ஆசிரிய கல்வியியலாளர்,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 103 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

வெல்லப்படவில்லை.

**புதிர் 103 க்கான கேள்வியும் விடையும்:**

ஒருவர் கோபப்படும் பொழுது அல்லது பயப்படும் பொழுது அத்தகைய நிலைமையை எதிர்கொள்வதற்கு தனது உடலை ஆயத்தமாக்கிக் கொள்வதற்கு ஒரு சுரப்பியொன்று தொழிற்படும். அச் சுரப்பியின் பெயர் என்ன? அதிரினல் சுரப்பிகள்

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 104


சரியான விடை:-..............................
முழுப்பெயர்:-..............................
முகவரி:-..............................
தொ.பே. இல:..............................
கையொப்பம்:..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண முதலமைச்சர் பதவியை அரசு வெற்றுப் பெட்டியாகவே வழங்கியுள்ளது

## சாடுகிறார் விக்கிரமபாகு கருணாரட்ன

**வடமாகாண முதலமைச்சு பதவியை அரசாங்கம் விக்னேஸ்வரனுக்கு சுதந்திரம் அதிகாரம் என்ற எதுவுமே அற்ற வெற்றுப்பெட்டியாகவே வழங்கியுள்ளது என்று நவசமசமாஜ கட்சியின் தலைவரும் மேல் மாகாண சபை தேர்தல் வேட்பாளருமான விக்கிரமபாகு கருணாரட்ண குற்றம் சுமத்தியுள்ளார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்,வடமாகாண சபை தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று முதல மைச்சராக விக்னேஸ்வரனால் மாகாண சபையின் செயலாளரை நியமிப்பதற்கான அதிகாரம் கூட இல்லை.

இதிலிருந்து என்ன தெரிகின்றதென்றால் முதலமைச்சர் என்ற பதவி மட்டுமே அரசாங்கத்தினால் வெற்றுப்பெட்டி போல வழங்கப்பட்டுள்ளதே தவிர அதற்குள்ள அதிகாரம் எதுவுமே வழங்கப்படவில்லை.

நாட்டில் சுதந்திரம் உள்ளது, சமத்துவம் உள்ளது என்று வெளி நாடுகளில் பொய் பிரசாரங்களை செய்து கொண்டு சர்வாதிகார ஆட்சியையே அரசாங்கம் நடத்துகின்றது.

எனது அலுவலகம் மீது கல்லெறிந்து தாக்குதல் நடத்தினர். யார் எதற்காக கல்லெறிந்தனர் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் பொலிஸாரினால் கூட எதுவித நம்பகரமான நடவடிக்கையையும் எடுக்க முடியவில்லை. இங்கு சர்வாதிகார ஏகாதிபத்திய ஆட்சியே நடைபெறுகின்றது.

இந் நாட்டில் விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, குணதாச அமரசேகர போன்றோர் இனவாதத்தை பரப்பி இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை சீர்குலைத்து அதன் மூலம் அரசியல் நடத்துகின்றனர்.

இன்று இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமே அல்ல பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு எதிராகவும் ஜனநாயக விரோத நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்கின்றது.

நாட்டில் அதிகளவு இனவிரோத அரசாங்கத்தின் அராஜக ஆட்சியினால் தமிழ் மக்கள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நதிகிடைக்க வேண்டும். உரிமை கிடைக்க வேண்டும். இன்று சர்வதேசம் அரசின் அராஜகத்தினை கண்காணித்து கொணடு தான் இருக்கிறது.

இதற்கான விலையை அரசு விரைவில் செலுத்த வேண்டி ஏற்படும். வடபகுதி மக்களும் இந்நாட்டவர்களே. அவர்களது உரிமைகளை அரசாங்கம் வழங்கி நல்வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க முனைய வேண்டும்.

மாறாக தொடர்ந்து காணி அபகரிப்பு, இனசுத்திகரிப்பு போன்ற நடவடிக்கை தொடருமானால் அதற்காக பாரிய விலையை அரசாங்கம் செலுத்த வேண்டியிருக்கும் என்றார். (2-9)

# ஷிராணியின் கணனி சாட்சிகளை பரிசீலிக்க நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீது இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சுமத்தியுள்ள குற்றச்சாட்டு தொடர்பான கணனி சாட்சிகளை பரிசீலனை செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பலபிட்டிய இந்த அனுமதியை அளித்துள்ளார்.

ஷிராணி பண்டாரநாயக்க சார்பில் சட்டத்தரணி நலின் லத்துவஹெட்டி தாக்கல் செய்த மனுவொன்றை விசாரித்த பின் சாட்சியை பரிசீலிக்க நீதவான் அனுமதி அளித்துள்ளார்.

பிரதிவாதி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கணனி சாட்சியை பரிசீலிக்க வேண்டும் என அவர் மனு ஊடாக கேட்டிருந்தார்.

அதன்படி, ஷிராணி பண்டாரநாயக்கவின் சட்டத்தரணி, கணனி நிபுணர்கள் இருவர் மற்றும் கணக்காய்வாளர் ஒருவருக்கு சாட்சியை பரிசீலிக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. (2)

# வெள்ளைக்கொடி சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படமாட்டாது

## அரசு அறிவிப்பு

வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வெள்ளைக்கொடி சம்பவம் தொடர்பில் ஆதாரங்கள் கிடையாது.

எனவே, விசாரணை நடத்தப்படமாட்டாது என ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அறிவித்துள்ளது.

எந்தவொரு சாட்சியமும் இல்லாத சம்பவம் குறித்து விசாரணை நடத்துவது எவ்வாறு? இந்தச் சம்பவம் தொடர்பில் சாட்சியமளிக்க விரும்பும சாட்சியாளர்களை அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளை முன்வைக்க திட்டமிட்டிருந்தார்.

எனினும் சாட்சியாளர்களை முன்னிலைப்படுத்த அவரால் முடியவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது. (2)

# பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

சுன்னாகம் வர்த்தக சங்க மேல்மாடியில் எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தலைவர் பகிரதன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து சிகை ஒப்பனையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (2-4)

# அபிவிருத்தி தகவல்களை பாராளுமன்றிற்கு சமர்ப்பித்தால் சந்தேகம் ஏற்படாது

நாட்டில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் போது அது தொடர்பான விடயங்களை மக்கள் தெரிந்து கொள்ள வழிவகை செய்வது முக்கியமாகுமென சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி பற்றிய தகவல்கள் அனைத்தும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டால் எவருக்கும் எவ்வித சந்தேகங்களும் ஏற்பட வாய்ப்பிருக்காது.

கொழும்பு துறைமுக நகர நிர்மாணப் பணிகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எழுப்ப முனைந்த போது சபையில் பெரும் சர்ச்சை எழுந்தது. அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்தன போன்றோரும் இதன் போது கருத்துக்களை முன்வைத்தனர்.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் நிலையியற் கட்டளைச் சட்டத்தின் கீழ் தாம் எழுப்பிய கேள்விகளுக்கு ஆளும் கட்சியின் தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட பதில்கள் தவறானவை எனத் தெரிவித்தே எதிர்க் கட்சித் தலைவர் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்ப முற்பட்டார்.

எனினும் அமைச்சர் ஒருவரால் வழங்கப்பட்ட பதிலொன்று மீது சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்ப முடியாது என சபாநாயகர் இதன் போது தெரிவித்தார்.

அதன்போது மீண்டும் குறிப்பிட்ட எதிர்க்கட்சித் தலைவர் பிரதமராலும் அமைச்சர்களாலும் வழங்கப்பட்ட பதில்களில் முரண்பாடுகள் நிலவுவதாகத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் நிமல் சிறிபால டி சில்வா ஒரு கேள்விக்குப் பதிலளித்த பின்னர் அதில் சரி - பிழை கூற முடியாது. பதில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதில் எதிர்க்கட்சி சரியாகச் செயற்படுகிறதா அல்லது ஆளுங்கட்சி சரியாக செயற்படுகிறதா என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்வார்கள் என்றார்.

இத்தகைய விடயம் தொடர்பில் தெளிவு பெற எதிர்க்கட்சி விவாதமொன்றைக் கோர முடியுமே தவிர சிறப்புரிமைப் பிரச்சினையை எழுப்ப முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். இந்த சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்த சபாநாயகர் கேள்வியொன்றுக்கு அளிக்கப்பட்ட பதிலை வைத்து எதிர்க் கட்சித் தலைவர் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றைக் கொண்டு வர முடியாது என தெரிவித்தார். (2)

# வலி.வடக்கில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட முன்னரங்க வேலிகள் அகற்றப்படவில்லை

## பிரதேச உப தவிசாளர் சஜீவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த முன்னரங்க வேலிகள் எவையும் அகற்றப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகவலை வலி.வடக்கு மீள்குடியேற்றத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளருமான எஸ்.சஜீவன் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜெனீவா மனிதவுரிமை கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இராணுவத்தினர் வலி.வடக்கை விடுவிப்பதற்கு ஆயத்தமாகியுள்ளதைப் போன்று காட்ட முயன்றமை கண்டிக்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

வலி.வடக்கிலுள்ள பொதுமக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் அளவிலான காணிகளை இராணுவம் சுவீகரித்து வைத்துள்ளது.

பொதுமக்களின் பூர்வீக நிலங்கள் 24 வருடங்களுக்கு மேலாகவும் விடுவிக்கப்படாமல் உள்ளதனால் அவர்கள் இன்றும் அகதி முகாம்களிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர்.

இந்நிலையில் ஜெனீவா மனிதவுரிமை கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையிலும் வலி.வடக்கில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள வேலிகளை இராணுவமே மீண்டும் அகற்றுவதாக கூறப்பட்டு வருகின்றது.

இதில் எவ்வித உண்மையும் இல்லாததோடு தொடர்ந்தும் இராணுவத்தினர் அங்கு நிலை கொண்ட நிலையில்தான் உள்ளனர்.

ஒட்டகப் புலம், வசாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன், வறுத்தலைவிளான், மாவிட்டபுரம் என்ற முன்னரங்குகள் எவற்றிலும் இராணுவத்தினரின் வேலிகள் அகற்றப்படாமலேயே உள்ளன எனத் தெரியவருகின்றது.

இதேவேளை காங்கேசன்துறை சந்தியிலிருந்து கீரிமலை நோக்கிச் செல்லும் கே.கே. எஸ். வீதிவரையான இரண்டு பக்கமும் செம்மண் பரவப்பட்டு பூங்கன்று வைக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர் என உப தவிசாளர் சஜீவன் தெரிவித்தார்.

மேலும் எமது பூர்வீக நிலங்களை இராணுவம் விடுவித்து தாம் அங்கு குடியேற அனுமதிக்க வேண்டுமென வலி.வடக்கை சொந்த இடமாகக் கொண்டு இடம் பெயர்ந்துள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-4)

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை

## மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவிப்பு

இலங்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்து ள்ளார்.

தாய்நாட்டை மீளக் கட்டியெழுப்புதல், பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல் அனைவரினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் சில நாடுகள் இலங்கை மனிதவுரிமை தொடர்பில் சர்வதேச விசாரணைகளை கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு பிரஜையாவது உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாட்டுக்கோ அல்லது வெளிநாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டுக்கோ எடுத்துச் செல்லவோ கொண்டு வரவோ முயற்சிக்கக் கூடாது. இவ்வாறான முனைப்புக்களின் மூலம் வெற்றியாளர்கள் எவரும் இருக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சுயாதீனமான நாடு ஒன்றின் மீது சர்வதேச சமூகம் பலவந்தமான முறையில் தலையீடு செய்யக் கூடாது என ஆண்டகை மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர்களையும் படகுகளையும் விடுவித்தால் பேச்சுவார்த்தைக்கு தயார்

## அமைச்சர் ஜீ.கே.வாசன் உறுதி



சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் விடுவித்தால் மட்டுமே இலங்கையுடன் 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடத்துவோம் என இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் தெரிவித்துள்ளார்

இதுதொடர்பில் அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்களின் பிரச்சினையை பொறுத்தவரை அது அவர்களுடைய வாழ்வாதாரம் தொடர்புடையது என்பதால் மனிதாபிமான அடிப்படையில்தான் தீர்வுகாண வேண்டும் என்பதற்காக இலங்கை ஜனாதிபதி ராஜபக்சவுடன் பிரதமர் மன்மோகன் சிங் மியன்மார் நாட்டில் சந்தித்து பேசியுள்ளார். ஆனால் இலங்கை அரசு தொடர்ந்து தமிழக மீனவர்களையும், படகுகளையும் சிறை பிடித்து வரு கிறது.

மேலும் இலங்கை அரசு சிறை பிடித்து வைத்துள்ள மீனவர்களையும், படகுக ளையும் விடுவித்தால் மட்டுமே 2ஆம் கட்ட பேச்சு வார்த்தை நடத்த முடியும்.

இதேவேளை இலங்கையின் கடற்பகுதிக்குள் அத்துமீறினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், மேலும் 15 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இல ங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முனனரும் 32 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களின் மூன்று படகுகளும் கைப்பற்றப்பட் டுள்ளன.

இவர்கள் மன்னாருக்கு அழைத்து செல்லப்பட்டு பொலி ஸாரிடம் கையளிக்கப்ப ட்டுள்ளனர்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இரண்டு நாட்டு மீனவர்களுக்கு இடையில் கொழும்பில் பேச்சுக்கள் இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெறுகின்றன என்றார். (2)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி ஆனந்தசோதி சபாரத்தினம் கிறிஸ்ரினா



சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும் இங்கிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்தசோதி சபாரத்தினம் கிறிஸ்ரினா முதலாம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு All Saints Roman Catholic Church , 529 Krnton Road , Harrow ,Middlesex ,HA3 OUL ,Uk என்னும் முகவரியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.


### திருமதி சில்வெஸ்ரர் மேரி திரேசா



கரம்பனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி பேர்லினை வசிப்பிடமாகவும் கொண்ட சில்வெஸ்ரர் மேரி திரேசா கடந்த 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு St, Johannes - Basilika , LilienthalstraBe ,10965 , Berlin ,Germany என்னும் முகவரியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.


### ஐயாத்துரை சண்முகராஜா



நவாலியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Wimbledon ஐ வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சண்முகராஜா (இளைப்பாறிய அரசாங்க அதிபர்) கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு Hinchley Wood School , Claygate Lane , Esher KT10 0AQ, Uk என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சோமசுந்தரம் சேனாதிராஜா



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் சேனாதிராஜா (இளைப்பாறிய அதிபர்) கடந்த 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை8 மணிக்கு Ogden Funeral Homes ,4164 Sheppard Ave E , Scarborough ,ON M1S 1T3 , Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி அப்பையா தெய்வானைப்பிள்ளை



சரசாலையைப்பிறப்பிடமாகவும் கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா தெய்வானைப்பிள்ளை நேற்றுமுன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை சனிக்கிழமை அன்று நடைபெறும்.

## அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/ செங்குந்தா இந்துக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பாடசாலையின் அதிபர் ச. தர்மகுலசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (2-4)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

## விளக்கமறியல் நீடிப்பு

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உட்பட மூவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் தானியல் றெக்ஷியன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்ட கமலேந்திரன் ஊர்காவற்றுறை நிதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தார்.

விளக்கமறிய்ல் வைக்கப்பட்டுள்ளநிலையிலேயே வடக்கு மாகாண சபை அமர்வுகளில் பங்கேற்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் நேற்றைய தினம் மீண்டும் விசாரணைக்கு கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கினை விசாரணை செய்தநீதவான் எஸ்.லெனின் குமார் கமல் உட்பட றெக்சியனின் மனைவி மற்றும் முச்சக்கரவண்டி சாரதி ஆகிய மூவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-4-6)

## ஜனாதிபதி சர்வதேச அணுகுமுறையால் ஜெனீவா பிரச்சினையை வெல்வார்

### அமைச்சர் ராஜித சேனாரத்ன

(கொழும்பு)

**ஏனைய பிரச்சினைகளை வெற்றிகரமாக முகம் கொடுத்தது போன்று ஜெனீவா பிரச்சினையையும் ஜனாதிபதி சர்வதேச அணுகுமுறை மூலம் தீர்வு காண்பார் என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

இலங்கை குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனவும் அது குறித்து கண்காணிக்க வேண்டும் எனவும் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும், அரசாங்கத்தினால் அதனை நிராகரிக்க முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஜெனீவா மாநாடு குறித்து வினவப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

பொருளாதாரப் பிரச்சினையையோ யுத்தத்தையோ காட்டி வாக்கு பெற முடியாததால் ஜெனீவா மாநாட்டை காட்டி வாக்கு பெற ஐ.தே.க. முயல்கிறது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணைக்கு அரசாங்கம் உரிய பதில் வழங்கும். இலங்கைக்கு ஒரு வருட கால அவகாசம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு கால அவகாசம் வழங்கப்பட்டால் தேவையான நடிக்கைகளை முன்னெடுக்க அவகாசம் ஏற்படும்.

ஜெனீவா மாநாட்டுக்கு முகம் கொடுப்பது தொடர்பில் நான் உட்பட 6 அமைச்சர்களின் கையொப்பத்துடன் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை வழங்கியுள்ளோம.

இதன் சட்டப் பின்னணியை [illegible] ஆராயவும் இதற்கான [illegible] குழுவொன்றை நியமிக்கவும் அதில் கோரியுள்ளோம். இதுவரை எதுவித பதிலும் கிடைக்கவில்லை. அதில் எமது தரப்பு அபிப்பிராயத்தையே முன்வைத்துள்ளோம்.

எமக்கு பொருளாதாரத் தடை விதிப்பதானால் பாதுகாப்பு சபையிலே அது குறித்து முடிவு எட்டப்பட வேண்டும். அங்கு சீனா, ரஷ்யா, ஆகிய நாடுகள் எச்சந்தர்ப்பத்திலும் இதற்கு இடமளிக்காது. மனித உரிமைப் பேரவையினூடாக இலங்கைக்கு பொருளாதாரத்தடை விதிக்க இயலாது.

இந்தியா தனது வெளிநாட்டுக் கொள்கைப்படி தமது முடிவை எடுக்கும். ஜனாதிபதி இந்திய பிரதமரைச் சந்தித்துள்ளார்.

எமக்கு இந்த சர்வதேச ரீதியான பிரச்சினையைத் தீர்த்தால் நாட்டில் வேறு பிரச்சினை எதுவும் இருக்காது. இந்தத் தேர்தல் முடிவுகள் மக்களுக்கு முன் கூட்டியே தெரியும்.

அதனால் விழித்திருந்து முடிவுகளை அறிய வேண்டிய தேவை இருக்காது. ஜே. வி. பி. தலைமை மாறினாலும் ஐ. தே. க. தலைவர் இறுதி வரை அந்தப் பதவியில் இருப்பார். இந்நிலையில் அவரும் கட்சி [illegible] இறுதியில் [illegible] என்றார். (2-3)

## ஏழு பேரின் விடுதலை வழக்கில் பதிலளிக்க மத்தியரசுக்கு கால அவகாசம்

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் 7 பேரின் விடுதலை தொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவிற்கு பதில் மனு அளிக்க மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் எதிர்வரும் 26ஆம் திகதி வரை அவகாசம் அளித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் உட்பட 7 பேரின் விடுதலையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு மனுத் தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், ஏழு பேரின் விடுதலைக்கு இடைக்கால தடை விதித்ததோடு, தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, கடந்த வாரம் தமிழக அரசு பதில் மனு தாக்கல் செய்தது.

இந்நிலையில், வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, தமிழக அரசின் மனுவிற்கு பதில் மனு தாக்கல் செய்ய மத்திய அரசு அவகாசம் கோரியது.

அப்போது, அரசின் பதில், ஆவணங்களை விட குற்றவியல் தண்டனைச் சட்ட அம்சங்களே முக்கியம் என்றும், மரண தண்டனை குறித்து குற்றவியல் சட்ட அம்சங்கள் ஆராயப்படும் என்றும் நீதிபதிகள் தெரிவித்ததோடு, வழக்கு விசாரணையை எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கத்தேய நாடுகள் குழப்ப நிலையை உருவாக்கி நாட்டை திசை திருப்ப முனைகின்றன-பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

***முப்பது வருடகால யுத்தத்தின் பின்னர் அபிவிருத்திகளை காணும் வட, கிழக்கு மக்களின் புன்சிரிப்பை சகிக்க முடியாத மேற்கத்தேய நாடுகள் அதனை மாற்றியமைக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.***

கண்டி மாவட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பில் அரசாங்க அதிகாரிகளை அறிவுறுத்தும் செயலமர்வு பேராதனை கெட்டம்பே மைதானத்தில் நேற்றையதினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

சுமார் 5 வருடங்களுக்கு முன்னர் எமது நாடு இருந்த நிலையை விட, இன்று முற்றாக மாறிவிட்டது. வெளிநாட்டிலிருந்து வரும் ஒருவருக்கு அன்று கட்டுநாயக்காவிலிருந்து கொழும்பை வந்தடைய இரண்டரை மணித்தியாலங்கள் எடுத்தன. இன்று அது 20 நிமிடங்களாக சுருங்கிவிட்டது.

அதேபோல் அன்று கொழும்பு மாநகரில் பெருமளவில் குப்பைகூழங்கள் காணப்பட்டன. இன்று அது சுத்தமான, அழகான நகராக மாறிவிட்டது. மேம்பாலம், சுரங்க வழிப்பாதை, அதிவேக வீதியென்று புதிய பல்வேறு அபிவிருத்திகளை இன்று எமது நாட்டில் காணக்கூடியதாக உள்ளன. அன்று யாழ்ப்பாணத்திற்கு பாரிய சிரமத்திற்கு மத்தியில் ஆகாய மார்க்கமாக மட்டுமே செல்லக்கூடியதாக இருந்தது.

இன்று விரும்பியவாறு அங்கு செல்லக்கூடியதாக இருக்கின்றது. புகையிரதத்தில் பளைவரை செல்ல முடியும். வாகனம் மூலம் ஏ - 9 வீதி வழியாக தடையின்றி செல்லமுடியும். அங்குள்ள மக்கள் முகத்தில் புன்னகை காணப்படுகிறது. சில மேற்கத்தேய சக்திகளுக்கு இதனை தாங்கிக்கொள்ள முடியவில்லை. இதனால், அவர்கள் சதி செய்து மீண்டும் பழைய குழப்ப நிலையை உருவாக்க முயற்சிக்கின்றனர்.

நாடு பொருளாதார ரீதியாக அபிவிருத்தி அடையும்போது பௌதீகவளங்கள் அதிகரிக்கும். வாழ்க்கை முறை சிறப்படையும். அதேவேளை, ஒரு சில கலாசார சீரழிவுகளையும் அது ஏற்படுத்தும். எனவே, இதனைத தடுப்பதற்கு சமயம் சார்ந்த சிந்தனைகளை அபிவிருத்தி செய்ய சமய தலைவர்களோடு இணைந்து செயற்படுகிறோம். இளைஞர்களை முறையாக வழி நடத்த விளையாட்டுத் துறையையும் அபிவிருத்தி செய்து வருகிறோம்.



இன்று நாடு சகல துறைகளிலும் அபிவிருத்தி கண்டுள்ளது. பிரதேச சபைக்குரிய மதகு ஒன்றை கூட நிர்மாணிக்க முடியாதிருந்த பிரதேசசபை அங்கத்தவர்கள் இன்று பாரிய பாலங்களை கட்டுமளவு சக்தி பெற்றுள்ளனர்.

எனவே, பொருளாரதார வளம் அதிகரிக்கும்போது வாழ்க்கைச் செலவுடன் தொடர்புடைய ஏனைய துறைகளிலும் செலவீனங்கள் அதிகரிக்கும். இதனையொரு சுமையாக கருதமுடியாது. இதனை ஈடுசெய்வதற்காக பல்வேறு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இன்று மேற்குலகில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரிக்கும்போது எமது நாட்டில் அது குறைந்து வருகிறது. அதேபோல், அங்கு பண வீக்கம் அதிகரிக்கும்போது எமது நாட்டில் பண வீக்கம் குறைந்து வருகிறது. எமது நாட்டில் பொருளாதார அபிவிருத்தி 8 சதவீதத்தால் அதிகரிக்கும்போது மேற்கத்தேய நாடுகள் பலவற்றில் அது குறைந்து கொண்டு போகின்றது. சுற்றுலாத்துறை, வெளிநாட்டு முதலீடு போன்றவை மூலம் எமது தேசிய வருமானம் அதிகரித்துள்ளது.

இதனை புரிந்துகொண்ட உள்நாட்டு மக்கள் எமது அரசியல் பலத்தை மேலும் அதிகரிக்க பங்களிப்பு செய்கின்றனர். ஆனால் இவை அனைத்தையும் தாங்கிக் கொள்ள முடியாத மேற்குலகு அதனை திசை திருப்ப முயற்சிக்கிறது என்றார். (2)

## 39 பில்லியன் ரூபா செலவில் இரு அதிவேக நெடுஞ்சாலைகள்



(கொழும்பு)

39 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொட்டாவ - கடுவலை மற்றும் காலி - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலைகள் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளன.

கொட்டாவ - கடுவலை அதிவேக நெடுஞ்சாலை நாளை திறந்து வைக்கப்படவுள்ளது.

அத்துடன் காலி - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலை இம்மாதம் 15 ஆம் திகதி திறக்கப்படவுள்ளதாக துறைமுக மற்றும் பெருந்தெருக்கள் திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

21 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 10.5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட கொட்டாவ - கடுவலை அதிவேக நெடுஞ்சாலை அடுத்த வருடத்திற்குள் கெரவலப்பிட்டிய வரை விரிவுப் படுத்தப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக 29 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கடுவலையில் இருந்து கடவத்தை வரையான வீதியின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனை தவிர 18 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 30.8 கிலோ மீற்றர் நீளம் கொண்ட காலி - மாத்தறை அதிவேக நெடுஞ்சாலையை அம்பாந்தோட்டை வரை விரிவுப்படுத்தும் பணிகள் அடுத்த சில மாதங்களில் தொடங்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

## வடக்கில் தண்ணீர் தட்டுப்பாட்டை தீர்க்க யாழ்.-கிளி. திட்டத்தை நடைமுறைப்படுத்துக

### பிரான்ஸ் பிரதிநிதிகளிடம் யாழ்.அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நிலவும் தண்ணீர் தட்டுப்பாட்டை தீர்க்க யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதிநிதிகளிடம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவன பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின் போது அவர் யாழ்ப்பாண மாவட்டத்தில் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனையடுத்து மாவட்ட நீர்வள முகாமைத்துவக் குழு எதிர்காலத்தில் நீர்வளத்தை பேண சில தந்திரோபாயங்களை மேற்கொண்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் தற்போது பயிர்ச் செய்கைக்கும், குடிதண்ணீருக்கும் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. தீவுப் பகுதிகளில் வாழும் மக்கள் தண்ணீரை கொள்கலன்கள், வான்கள் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் கூறினார்.

தண்ணீர் தட்டுப்பாட்டினைத் தவிர்ப்பதற்கான ஏற்பாட்டினை முன்னெடுக்க சம்மதம் தெரிவித்துள்ள பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனத்தினர் அதன் முதற்கட்டமாக தீவுப் பகுதிகளுக்கான வசதிகள் செய்வதாகவும் உறுதியளித்துள்ளனர். (2)

## மஹோற்சவம்

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதில் இம்மாதம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (2)







பண்டிதர் யோ.சோமசுந்தரத்தின் இலக்கண மரபுகளும் மொழி வரலாறும் எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலாநிதி அகளங்கன் நூலை வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நுகத்தடியில்லாத வண்டியையும்
கடிவாளமில்லாத குதிரையையும் செலுத்த இயலாது.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கில் தொடரும் அவல மரணங்கள் தேவலோகத்தில் அவசர மாநாடு-6

தேவலோக மாநாடு நடந்து கொண்டிருக்கையில் வாயிற்காப்போன் அவசரமாக உள் நுழைந்து விஷ்ணுவின் காதில் ஏதோ சொல்ல மாநாட்டில் ஒரே பரபரப்பு.

என்ன சங்கதி என்று பிரம்மா வினவ, நேற்றைய தினம் பளையில் பஸ் வண்டி ஒன்று அதிவேகமாகச் சென்று பளைச்சந்தியில் உள்ள கடைகளை உடைத்தெறிந்து விபத்துக்குள்ளாகி உள்ளது. இவ் விபத்தில் பலர் காயம் அடைந்துள்ளனராம்.

**பிரம்மா:** அட! யமன் மாநாட்டில் இருந்தமையால் காயத்தோடு விபத்து முடிந்து போனது என்று கூற சபையில் சலசலப்பு. இத்தகவலைத் தொடர்ந்து நேற்றைய மாநாட்டுத் தொடர் ஆரம்பமாகியது.

வடக்கு மாகாண சபையில் கொண்டு வரும் தீர்மானம் போல தேவலோக மாநாட்டிலும் தீர்மானமா? என்று யமன் கேட்க, அதற்கு பதில் அளித்த பிரம்மா, அங்கு கூட தீர்மானத்தைத் தணிக்கை செய்யும் அதிகாரம் வடக்கின் முதல்வருக்கு உண்டு.

**இந்திரன்:** சிவ சிவா பார்த்தீர்களா! மீண்டும் பாதை மாறுகிறது. சபையில் ஒரே கலகலப்பு

அமைதி... அமைதி...

என்ற ஒலி எழுகையால் சபையில் நிசப்தம் ஏற்பட்டது.

வடக்கில் நடக்கும் வாகன விபத்தைத் தடுக்க என்ன வழி என்பதைக் கூறுமாறு மாநாட்டுத் தலைவர் சித்திரகுப்தனுக்குப் பணிக்கிறார்.

மாநாட்டுத் தலைவரின் கட்டளைக்கு அமைய சித்திரகுப்தன் விபத்து மரணத்தை தடுக்கும் வழிமுறை பற்றி விரிவாகக் கூறுகின்றார்.

**சித்திரகுப்தன்:** அனைவருக்கும் வணக்கம். வடக்கில் நடக்கும் வீதி விபத்துகளுக்கு நிறையவே காரணம் உண்டு. இதில் வீதி விதி முறைகளை தெரியாமை முதற் காரணமாகும். வீதியில் எவ்வாறு செல்வது என்பது குறித்து மாணவப் பருவத்தில் விளக்கம் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், வீதியில் சமாந்திரமாக துவிச்சக்கர வண்டியில் பயணிக்கும் பண்பாடு மாணவர்களிடமே ஆரம்பமாகின்றது.

எனது ஆய்வின்படி ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு முன்னர் சமாந்திரமாகச் சைக்கிள்களில் பயணித்த மாணவர் குழாத்தை சார்ந்தவர்கள் இப்போதும் வீதி ஒழுங்கு முறைகளைப் பின்பற்றும் மனநிலை அற்றவர்களாக உள்ளனர்.

எனவே, வீதி நடைமுறை பற்றி மாணவர்கள் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். மேலும் ஒழுங்கு முறைகளைப் பின்பற்றத் தவறுவோரிடம் தண்டனைப் பணம் அறவிடுவதற்குப் பதிலாக அவர்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தின் உரிமத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி மீள் சாரத்தியப் பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேநேரம் விபத்துக்குள்ளாகும் சாரதிகள், எந்தச் சாரதியப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றுள்ளார் என்ற தகவலை அறிந்து உரிய பயிற்சி நிறுவனத்திற்கு எச்சரிக்கைக் கடிதம் அனுப்ப வேண்டும்.


எனினும் வடபுலத்துப் பொலிஸாரிடம் இலஞ்சம் இருக்கும் வரை நிலைமை கவலைக்கிடம் என்பதை இவ்விடத்தில் கூறுவது அவசியம்.

இது ஒரு புறம் இருக்க, தற்கொலை மரணங்களைத் தடுக்க தொண்டு நிறுவனங்களும் சமய அமைப்புகளும் முன்வர வேண்டும்.

தீர்மானம் எடுக்கமுடியாமல் மனவிரக்தி அடைகின்ற நேரங்களில் தொண்டு அமைப்புகளின் உதவியைப் பெற்று தங்களை ஆற்றுப்படுத்த முடியும் என்ற தகவல் அனைவருக்கும் தெரியப்படுத்துவது அவசியம். அதற்கான அமைப்புகளும் தேவை என்று தனது பரிந்துரையை சித்திரகுப்தன் மாநாட்டில் தெரிவிக்க சபையில் கரகோசம் ஒலித்தது.

ஒலித்த கரகோசத்தில் விழித்த நான், கண்டது கனவு என்று உணர்ந்தேன். (முற்றும்)

# தர்மத்தை நிலைநாட்டி கலியுகத்தை காத்திட கல்கி அவதரித்து விட்டார்



அரிதான முக்தி நிலை நாடி அன்பினில் திளைத்து பாசுரங்களைப் பாடிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் ஞானிகளும் யோகிகளும் மகா புருஷர்களும் அவதரித்த புண்ணிய பூமியில் துக்கத்தில் மூழ்கியிருக்கும் இத்தரணியில்

பரந்தாமனின் பாதத்தை சுமக்கத் தயாராகும் தருணம்!

நாரணன் நரனாகும் நேரம்!

தேவ தேவன் மானுட உடலைத் தரித்துதித்த சுபவேளையே!

1949ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7 ஆம் திகதியாகும். இதுவே பகவானின் ஜன்மதினம். ஸ்ரீமதி வைதாபி அம்மா ஸ்ரீவரதராஜன் எனும் புண்ணிய தம்பதியினரின் மூத்த தவப்புதல்வனாக ரோகினி நட்சத்திரத்தில் தமிழ்நாட்டை சேர்ந்த நத்தம் கிராமத்தில் அவதரித்தார். ஜனன சமயம் எதிர்பார்க்காமலே கிராமம் முழுவதும் அலங்கரிக்கப்பட்டு கோலாகலமாக மண்ணவர் மகிழ விண்ணவர் போற்ற அவதரித்தார்.

அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டி கலியுகத்தைக் காத்திட கல்கி ஜன்மித்து விட்டார். தாய்க்குத் தாயாய் தந்தைக்குத் தந்தையாய் விளங்கும் இறைவன் அவதரித்து நேமத்தில், சத்யலோகத்தில் வரதபாளையத்தில் ஆன்மீக பல்கலைக்கழகத்தை நிர்மாணித்து Golden Temple இல் இருந்து உலக மக்களுக்கு பரிபூரணமாக அருள் பாலித்து அவதார நோக்கத்தை சம்பூர்ண ஜீவன் முக்தியை அளித்துக் கொண்டிருக்கின்றார். இதனைப் பெறுவதற்கு மக்களாகிய நாம் தயாராக இருக்கின்றோமா...?

ஸ்ரீபகவானை அடைவதற்கு துறவு தேவையில்லை! பல்லாண்டு காலம் அவசியமில்லை! தத்துவ நூல்களைப் படிக்க வேண்டியதில்லை! விரதம் அனுஷ்டிக்கத்தேவையில்லை! முன்னனுபவம் எதுவும் வேண்டியதில்லை! என்ன வேண்டும்?

நாம் நம் தவறை உணர்ந்து நம் இதயத்துள் மண்டிக் கிடக்கும் காம, குரோத, லோப, மத மாச்சரியங்களை ஸ்ரீ பகவானிடத்தில் கூறி ஆழ்ந்த இதய பூர்வமான நம்பிக்கையை வைத்து அன்பு செலுத்தி அர்ப்பணித்து நிற்பதற்கு ஒரு சில நொடிகளே போதும். பக்திப் பிரார்த்தனை செய்து எம்மை மறந்த நிலையில் சரணாகதி அடைந்தால் போதும்.

ஓம் சச்சிதானந்த பரப்ரம்மா
புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீபகவதி சமேத
ஸ்ரீ பகவதே நமஹ

எனும் மூலமந்திரத்தை உச்சரித்தாலே போதும்.

மூல முதல்வராகிய ஸ்ரீபகவான் முழுமையையும் காட்டி பரமாத்மனாக இதயத்துள் தோன்றுவார். அற்புதங்கள் காட்டி எம்மை ஆனந்த நிலையை அனுபவிக்க அருள் செய்வார், உரையாடுவார். ஸ்ரீ பகவானை நாம் தாயாகவோ, தந்தையாகவோ, நண்பனாகவோ, கடவுளாகவோ எந்த முறையில் தியானிக்கின்றோமோ அந்த வடிவில் தோன்றுவார்.

## ஸ்ரீ கல்கி பகவானின் 66 ஆவது ஜென்ம தினம் இன்றாகும்

பரந்தாமன் அவதரித்திருக்கும் வேளையில் பெறுதற்கரிய மானிட பிறவியைப் பெற்றுள்ள நாம் பாக்கியசாலிகளே. அவதார புருஷரின் மகிமைகளை, லீலைகளை கேட்டுப் பாராயணம் செய்து பரப்புவதே சிறந்த சேவையாம்.

இந்த ஜென்ம மஹா தினத்தில் பக்தி பூர்வமாக பகவானின் பாதுகைக்கு அபிஷேகம் செய்து மங்கள ஆராத்தியுடன் பஜன் செய்து அருட்கடாட்சத்தை பெறலாம். அற்புதங்களும் மகிமைகளும் கோரிக்கைகளும் நிறைவேறும். கர்ம வினைகள் எரிந்துவிடும்.

பாதுகைகளை நகர சங்கீர்த்தனத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லும் போது பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் அவ்வூர் மக்களுக்கும் பஞ்ச பூதங்களுக்கும் ஸ்ரீ அம்மா பகவான் தீட்சை கொடுக்கும்போது புதியதோர் உலகத்தை உருவாக்கும் சிற்பிகளாவீர்கள்.

ஜாதி, மத, இன மொழி பேதமின்றி நாட்டில் ஏற்படும் மாற்றம் பிரபஞ்சத்தையே மாற்றிவிடும். ஒவ்வொருவரும் செய்யும் பிரார்த்தனை அழிவை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கும். இப்பூலோகத்தையே காப்பாற்றுவதாக அமையும்.

ஸ்ரீ கல்கியும் ஸ்ரீ பகவதி அம்மாவும் முக்திக்கான அவதாரமாக எம்மைப் பொய்மையிலிருந்து மெய்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், அறியாமையிலிருந்து ஞானத்திற்கும் தமதருளால் வழிப்படுத்துகின்றனர்.

**ஸ்ரீ அம்மா பகவான் சத்சங்க ஒன்றியம் யாழ். மாவட்டம்**

புதிதாக நியமனம் பெற்ற

# கிராம அலுவலர்களுக்கான இரண்டு வாரப் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற கிராம அலுவலர்களுக்கான முதல் இரண்டு வார கால பயிற்சி நெறி எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் புதிய கிராம அலுவலர்களை நியமனம் செய்யும் பொருட்டு கடந்த வருடம் போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

அத்தோடு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு பெறுபேறுகளின் அடிப்படையில் நேற்றைய தினம் 129 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

இந்நிலையில் இவர்களுக்கான இரண்டு வார கால பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளதாகவும் தொடர்ந்து வரும் பயிற்சி நெறிகள் பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்படவுள்ளதாகவும் இது பற்றிய அறிவுறுத்தல்கள் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9)

# சுவரொட்டி ஒட்டிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கு எதிராக சுவரொட்டி ஒட்டிய இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான வகையில் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர்கள் பலாலி பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 1.30 அளவில் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்களிடமிருந்து 97 சுவரொட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன. (எ-11)

# மஹோற்சவம்

மாதகல் பாணாக வெட்டி அருள் மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தின் மகோற்சவப் பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து உற்சவம் நடைபெறவுள்ளது.

இதன்போது எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை பூங்காவனத் திருவிழாவும் இடம்பெறும்.

மகோற்சவ காலங்களில் தினமும் 5 மணிக்கு பஜனை நிகழ்வும் இடம் பெறும் எனவும் காலை 9 மணிக்கு பகல் திருவிழாவும் மாலை 6 மணிக்கு இரவுத்திருவிழாவும் இடம் பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். [illegible]

# நினைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரசின் ஏற்பாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிட்டினன் சிவநேசனின் 6 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 க்கு திக்கம் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த கிட்டினன் சிவநேசனின் நினைவு நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அக்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (24-6)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### தாய்ப்பாலின் மகத்துவம்

இரண்டு வருடங்கள் தாய்ப்பால் அருந்தி வளர்ந்தவர்களுடைய எலும்பு மஜ்ஜைகள் 40 வயதிற்குப் பின்பும் தேய்வதில்லை என்றும் மூட்டு வலி வருவதில்லை என்றும் பாகிஸ்தான் கராச்சி பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாய்ப்பாலின் மகத்துவம் குறித்து திருக்குர்ஆன் "..... தாய்மார்கள் குழந்தைகளுக்கு முழுவதுமாக இரண்டு வருடங்களுக்குத் தாய்ப்பால் ஊட்டி பராமரிக்க வேண்டும்... " (2: 223)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிரிக்கெட் போட்டிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழகம் இ.ச.பே.நாகரத்தினம் நிறுவனத்தின் அனுசரணையுடன் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்க தவறிய விளையாட்டுக் கழகங்கள் இன்று வெள்ளிக் கிழமைக்குள் விகர்ணன் (077 6188486) அல்லது பாலவரதன் (077 5530753) ஆகியோரோடு தொடர்பு கொள்ளுமாறு கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக் கழக தலைவர் பா.பாலவரதன் அறிவித்துள்ளார். (கு)



(கரவெட்டி)

பருத்தித்துறை திருநாவலூர் விளையாட்டுக் கழகம் அணிக்கு 11 பேர் 10 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை நாளை சனிக்கிழமை முதல் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடத்தவுள்ளது.

இப் போட்டியில் பங்கு பற்றும் விளையாட்டுக் கழகங்கள் குறித்த கழகத்திலோ அல்லது பின்வரும் 077 9010003 இலக்கத்தோடோ தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (கு-24)



(கரவெட்டி)

பருத்தித்துறை தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகம் அணிக்கு 11 பேர் கொண்ட 20 ஓவர் கிரிக்கெட் போட்டியை நடத்தவுள்ளது.

வடமராட்சிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் இம்மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் விளையாட்டுக் கழகத்திலோ அல்லது பின்வரும் 077 7531400 இலக்கத்தோடோ தொடர்பு கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (கு-24)




(கரவெட்டி)


அச்சுவேலி கதிரொலி றொக்கட் விளையாட்டுக் கழகம் அணிக்கு 6 பேர் 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியை இம்மாதம் சனி, ஞாயிறு தினங்களில் அச்சுவேலி கதிரொலி றொக்கட் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தவுள்ளது.

இப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் பின்வரும் 077 8934111 என்ற இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (கு-24)

# இந்துக்களின் கிரிக்கெட் போர் இன்று கொழும்பில் ஆரம்பம்



மானிப்பாய் இந்துக் கல்லூரி



கொழும்பு இந்துக் கல்லூரி

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த துடுப்பாட்டப் போட்டி 3 ஆவது ஆண்டாக இடம்பெறவுள்ளது.

வருடாந்தம் நடைபெறும் இரு கல்லூரிகளுக்குமிடையிலான இப்போட்டி இன்றும் நாளையும் கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளுக்குமிடையிலான இத் துடுப்பாட்டப் போட்டி 3 ஆவது ஆண்டாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இரு பாடசாலை அதிபர்களின் முயற்சியால் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போட்டி முதன்முறையாக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 2 நாட்கள் கொண்ட போட்டியாக இடம்பெற்றது. இப் போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது.

கடந்த ஆண்டில் இப்போட்டி 2ஆவது தடவையாக ஒரு நாள் போட்டியாக மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரி வெற்றி பெற்றது. இவ் வருடம் 2 நாட்கள் கொண்ட போட்டியாக கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (கு-23)

# பருத்தித்துறை பிரதேச செயலக கரப்பந்து; வல்வை, பருத்தித்துறை ஐக்கியம் சம்பியன்



வல்வை விளையாட்டுக் கழகம்



பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

பருத்தித்துறை பிரதேச செயலகம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா அண்மையில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விவேகானந்தா விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 25:21, 25:22 என்ற செற் கணக்கில் வல்வை விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியுள்ளது.

பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் 02:25, 08:25 என்ற செற் கணக்கில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (கு)



கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கல்லூரியின் ஆசிரிய மாணவர்களுடனான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 5:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியில் பங்குபற்றிய அணியினரை படத்தில் காணலாம்.

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்







புங்குடுதீவு சேர் துரைச்சாமி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் மாணவர்களின் அணி வகுப்பு நடைபெறுவதையும் அதிபர் திருமதி.மா.கணேசன் உரையாற்றுவதையும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச விசாரணைக்கு...

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன மற்றும் பொறுப்புக் கூறத்தக்க விசாரணையை மேற்கொள்ள ஐ.நா மனித உரிமைப் பேரவை இலங்கையில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அமைக்க வேண்டும என நவநீதம்பிள்ளை அழைப்பு விடுத்தார்.

ஐ.நா மனித உரிமைப் பேரவையின் 25ஆவது அமர்வின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மீண்டும் நவநீதம்பிள்ளை சர்வதேச விசாரணைக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஜெனீவாவில் நேற்று நவிபிள்ளைக்கும் அமைச்சர் பீரிசுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இதற்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ்,

இலங்கை தொடர்பில் சமநிலையற்ற எதிர்மறைக் கருத்துக்களை ஐ.நா. மனிதஉரிமை பேரவையின் ஆணையாளர் நவிபிள்ளை தெரிவித்திருப்பதானது சமூக நல்லிணக்கத்திற்கு பாதகத்தினை ஏற்படுத்தும்.

மனிதஉரிமைகளுக்கான ஆணையகம் உட்பட சில நாடுகளின் பாரபட்சமான செயற்பாட்டினால் இலங்கையின் நல்லிணக்கம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் எங்களை அரசியல் கால்பந்தாக சில நாடுகள் பயன்படுத்துகின்றன. இதனால், எமது நல்லிணக்க முயற்சிகள் பெருமளவில் பாதிப்படைகின்றன எனவும் அமைச்சர் பீரிஸ் குற்றம்சாட்டினார்.

இதன்பின் கருத்து தெரிவித்த ஆணையர்,

இலங்கையில் கொடிய யுத்தம் முடிவடைந்து 5 ஆண்டுகள் கடந்து விட்ட போதிலும் இலங்கை தன் உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ளும் செயற்பாட்டில் தோல்வி கண்டுள்ளதால் ஐ.நா மனித உரிமைப் பேரவை சர்வதேச விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கான நேரம் வந்துள்ளது என்றார் நவநீதம்பிள்ளை. (எ-11)

## பீரிஸ் உரைக்கு...

பின்னர் பிரதிநிதிகள் எவரும் கைதட்டவில்லை என்பதுடன் கைலாகு கொடுத்து வாழ்த்தும் தெரிவிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

அமைச்சர்பீரிஸ்தனது உரையில்,

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவை, விமர்சிப்பதற்குப் பதிலாக மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையை விமர்சித்திருந்தமையே அமைச்சரை ஏனைய நாடுகளின் பிரதிநிதிகள் புறந்தள்ளக் காரணமாக அமைந்ததாக ஜெனிவாத் தகவல்கள் மேலும் கூறின. (எ-11)

## சர்வதேச விசாரணை...

தீர்மானம் குறித்து சில தமிழ் குழுக்கள் தமது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளன.

எனினும் கொழும்பு ஊடகம் ஒன்றின் டுவிட்டர் கேள்விக்கு பதிலளித்துள்ள பிரித்தானிய அமைச்சர் ஹ்யூகோ ஸ்வயர், சர்வதேச விசாரணைக்கு தமது அரசாங்கம் ஆதரவு வழங்கும் எனக் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே அமெரிக்க தலைமையிலான இந்த யோசனை ஜெனிவாவில் கொண்டு வரப்பட உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து இலங்கை அரசாங்கம் ஒரு நம்பகமான விசாரணையை நடத்தவில்லை என்பதால், சர்வதேச விசாரணை ஒன்று தற்போது தேவைப்படுகிறது.

ஐ.நா மனித உரிமை ஆணைக்குழு இலங்கையில் தற்போதைய மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்தி ஒரு சர்வதேச விசாரணைக்கான கட்டமைப்பை ஏற்படுத்தும் என எண்ணுகிறேன் என ஸ்வயர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் தலைமையில் மோதல்களில் ஈடுபட்ட இருத்தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அமெரிக்காவின் அனுசரணையில் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில்சமரபபிக்கப்பட்டுள்ள கடினமான மூன்றாவது வரைவு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, பிரித்தானியா, மொண்டிநீக்ரோ, மெசிடோனியா, மொரீசியஸ் ஆகிய நாடுகளினால் இந்த வரைபுயோசனை விநியோகிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய தேசிய செயல் முறை மற்றும் இருதரப்பினாலும் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் அதனுடன் சம்பந்தப்பட்ட குற்றங்கள் குறித்து நடத்தப்படும் விசாரணைகளை மனித உரிமை ஆணையாளரின் அலுவலகம் கண்காணிக்க வேண்டும் எனவும் அந்த தீர்மானத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-11)

## இலங்கை இராணுவ...

கேற்ற இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனனை சந்தித்துப் பேசினார்.

அப்போது இலங்கை இராணுவத்திற்கு இந்திய ராணுவம் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என்ற உறுதியை அவர் கோத்தபய ராஜபக்ஷவிடம் அளித்ததாக வெளியுறவுத் துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் கூட இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு சிறை பிடித்து செல்லப்பட்டுள்ள நிலையில், தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பான சூழ்நிலை காணப்படுகிறது.

இந்நிலையில் கோத்தபய ராஜபக்ஷவின் இந்திய வருகை மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டு, அவருடன் சிவசங்கர மேனன் தனியாக பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சரணடைந்த...

பான ஆதாரங்களை வழங்கியதாக அந் நிறுவனம் கூறியுள்ளது.

நடேசன் உள்ளிட்ட விடுதலைப புலிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் பலர் வெள்ளை கொடிகளுடன் படையினரிடம் சரண் அடைந்தனர். ஆனால் சரண் அடைந்த சில மணி நேரங்களில் அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என பிரபாகரனின் பாதுகாப்புப் பிரிவு போராளி கூறியுள்ளார். ஆசிரியர் ஒருவர் கூறுகையில், இலங்கைப் படையால் நான் கைது செய்யப்பட்டேன். பின்னர் வாகனத்தில் என்னை ஏற்றிச் சென்றனர். அப்போது புலித்தேவன், ரமேஷ், நடேசன் ஆகியோர துப்பாக்கி குண்டு காயங்களுடன் பிணமாகக் கிடந்தனர். அதை பார்த்தேன் எனத் தெரிவித்துள்ளார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி

தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற அவுஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலிய அணி 2-1 என வெற்றி பெற்றுள்ளது. தென்னாபிரிக்க அணி சமப்படுத்த போராடிய போட்டியில் 4.3 ஓவர்கள் மீதமுள்ள வேளையில் அவுஸ்திரேலிய அணி 254 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. தென்னாபிரி க்க அணி 265 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது. இதில் வேர்ணன் பிலாண்டர் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும், பப்டு ப்லேசிஸ் 47 ஓட்டங்களையும், டி வில்லியர்ஸ், டுமினி ஆகியோர் தலா 43 ஓட்டங்களையும் எடுத்தனா. பந்துவீச்சில் ரயன் ஹரிஸ 4 விக்கெட்களையும், மிச்சல் ஜோன்சன் 3 விக்கெட்களையும், ஜேம்ஸ் பட்டின்சன் 2




விக்கெட்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி தமது இன்னிங்ஸில் 127.4 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 494 ஓட்டங்களைப் பெற்று தமது துடுப்பாட்டத்தை நிறுத்தியது. இதில் அணித் தலைவர் மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 161 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 135 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். ஸ்டீபன் ஸ்மித் 84 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்துவீச்சில் டுமினி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிக் கொண்டார்.

தென்னாபிரிக்கா அணி முதல் இன்னிங்ஸில் 287 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்களையும் இழந்தது. இதில் பப்டு ப்லேசிஸ் 67 ஓட்டங்களையும், அல்விரோ பீற்றர்சன் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் மிச்சல் ஜோன்சன் 4 விக்கெட்டுக்களையும், ரயன் ஹரிஸ 3 விக்கெட்டுக்களையும், ஜேம்ஸ் பட்டின்சன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி தமது இரண்டாம் இன்னிங்ஸில் 58 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 303 ஓட்டங்களைப் பெற்று தமது துடுப்பாட்டத்தை நிறுத்தியது. இதன் மூலம் தென்னாபிரிக்கா அணிக்கு 511 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. டேவிட் வோர்னர் 145 ஓட்டங்களையும், கிறிஸ் ரோஜெஸ் 39 ஓட்டங்களையும் பெற்றனர். தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் கைல் அப்போட் 3 விக்கெட்களைக் கைப்பற்றிக் கொண்டார்.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் அவுஸ திரேலியா அணியின் டேவிட் வோர்னர் தெரிவு செய்யப்பட்டார். (க)

## முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பின் எல்லைக் கோட்டை தாண்டி அத்துமீறி மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட தமிழக மீனவர்களை பொலிஸார் கைது செய்ததோடு அவர்களது விசைப்படகுளையும் நேற்று இரவு 8.30 மணியளவில் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு கடற்தொழிலாளருக்கு வாழ்வாதாரமாக காணப்படும் முல்லைத்தீவு கடற்பரப்பில் தமிழக மீனவர்களின் இச் செயற்பாடு அண்மைக் காலமாக அதிகமாக காணப்படுவதாகவும்,

இவ்வாறான நடவடிக்கையால் தாம் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் சங்க சமாசத் தலைவர் அ.மரியதாஸ் தெரிவித்துள்ளார்.

மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வரும் இவ் வேளையில் குறித்த இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (எ-267)

## ஆசிரியர்களுடன்...

பேருந்து மோதுண்டதாக பளை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

இதில்14 பேர்படுகாயமடைந்தநிலையில் 03 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் 11 பேர் சாவகச்சேரி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர். மேலும், சிறு காயங்களுக்குள்ளான 12 பேர் பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று திரும்பியதாகவும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இவ்விபத்தின் போது பேருந்தில இருந்தவர்கள் மற்றும் வீதியில் நின்ற பொது மக்களுக்கும் காயம் ஏற்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது சாவகச்சேரி வைத்தியசாலையில் பாலேந்திரா மாலினி (வயது 31), தி.ஜங்கரன் (வயது 39), த.வசந்ததாசன் (வயது 37), அ.கனகரத்தினம் (வயது 43), க.உதயகுமார் (வயது 41), யூட்வின்சன் திரோஷ் (வயது 29), வ. முரளிதரன்(வயது 47) ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-9-15,29)

## பொருளாதாரத் ...

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் ஆட்சி பொறுப்பை ஏற்று கடந்த 9 வருடங்களில் நாட்டில் இருந்து வந்த பல பாரதூரமான பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளார்.

அதேபோல் சர்வதேசத்தை வெற்றி கொள்ளவும் அவருக்கு வல்லமை இருக்கின்றது..

எதிர்வரும் 29- ம் திகதி ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட உள்ள தீர்மானம் குறித்து தற்பொழுது எதனையும் கூற முடியாது.

அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் தொடர்பிலான தீர்வுகளை காண ஒரு வருட கால அவகாசம் கிடைக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)

## பளை விபத்தை...

இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 26 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்ததுடன், மேலும் பலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். படுகாய மடைந்தவர்களில் பளை மத்திய கல்லூரி மாணவனாகிய ஜெயசிங்கம் திவாகரும் (13) யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தங்கள் பாடசாலை மாணவன் விபத்துக்குள்ளாகியமையினை கண்டித்தும், குறித்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றமையை நிவர்த்தி செய்யக்கோரியும் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் பளை மத்திய கல்லூரிக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"பொலிஸாரின் அசமந்த போக்கு", "இக்கல்லூரியின் சொத்து திவாகர் அவரின் நிலைமை?" "அரசாங்கமே சலுகை செய்யாதே!, பளை சமூகமே வேடிக்கை பார்க்கிறீர்களா?" , "பொலிஸ் எங்கே?" "வளரும் பயிரை முளையில் தீண்டாதே" போன்ற சுலோகங்களைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ்வேளை அங்குவந்த இராணுவத்தினர் மாணவர்கள் சிலரைத் தாக்கியுள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த மாணவர்கள் குறித்த இராணுவ வாகனத்தினை முற்றுகையிட்டு வைத்திருந்தனர். பின்னர் அப்பகுதி இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்டதினைத் தொடர்ந்து இராணுவ வாகனத்தினை மாணவர்கள் விடுவித்தனர்.

தொடர்ந்து, பளைப் பொலிஸார் குறித்த பாடசாலை அதிபருடன் மேற்கொண்ட கலந்துரையாடலினைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் முடிவுக்கு வந்திருந்தது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CAMBRIDGE ENGLISH
Language Assessment
Part of the University of Cambridge

# FCE & IELTS

FIRST CERT[illegible]ATE IN ENGLISH

## AN INNOVATIVE, APPROACH TO IELTS

நீங்கள் ஒரே தடவையில் IELTS இல் Band 7 ற்கு மேல் எடுக்க இலகுவான வழி எமது FCE வகுப்பில் சேர்ந்து IELTS பாடநெறியையும் ஒரே நேரத்தில் படியுங்கள்.

* இது ஓர் Upper Intermediate B2, Level பரீட்சையாகும். U.K இல் எல்லாக் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் FCE யை IELTS க்குப் பதிலாக இதனை ஏற்றுக்கொள்கின்றன
* Every year, thousands of people who want to use English to improve their work, study and travel prospects prepare for Cambridge First Certificate in English
* FCE is an upper intermediate level exam.It tests the ability to deal confidently with a range of written and spoken communication.
* **Get a certificate that is a accepted globally**
* The exam is accepted by thousands of leading businesses and educational institutions worldwide.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் FCE யையும் IELTS யையும் ஒரே நேரத்தில் படியுங்கள்.

Subjects : Reading,Writing,Listening,Speaking & Use of English நீங்கள் ஆங்கிலத்தில் வாழ்நாள் முழுவதும் எழுத, வாசிக்க,பேச இந்த சர்வதேச தரம் வாய்ந்த பாட நெறி உதவும்.

**புதிய பிரிவுகள் 10.03.2014 ஆரம்பம்**



**Course Schedule**

Duaration 12 Weeks ILTES / FCE

Mon, Tues, Wed, Thur

Time 07.00 a.m - 08.30 8.30 - 10.30

## BRITISH COLLEGE OF ENGLISH

N[illegible]92, Navalar Road, Jaffna (பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக) Tel: 0778803887

(6663)



# மிக மலிவாக 23 இலட்சங்களுடன் கனடாவில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு

இன்னும் சொற்ப தினங்களிற்கு மிகச் சிலருக்கு மட்டுமே இந்த சந்தர்ப்பம் அரிய வாய்ப்பை கைநழுவவிடாதீர்கள்

(யாவும் நிபந்தனைகளுடன்)

7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி பிறைவேற் லிமிற்

175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.

021 2219016, 021 5689090

(C-6688)



## Chemistry Class

Pass paper ஊடாக துரித மீட்டல். நல்ல பெறுபேறு உறுதிப்படுத்தப்படும்.

யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், நவாலி, மானிப்பாய், வட்டுக்கோட்டை, உரும்பிராய், கோப்பாய், கைதடி ஆகிய இடங்களில் இருந்து தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு:-0789989956

(5770)


## மனைவியை கொலை...

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு இணங்க குறித்த வழக்கு யாழ். மேல் நீதி மன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது.

யாழ். மேல் நீதிமன்றில் இவ் வழக்கு நடைபெற்று வந்த நிலையில் நேற்றைய தினம் தீர்ப்பிற்காக யாழ் மேல் நீதி மன்ற நதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது சந்தேக நபரான கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவரான சுரேஸ் தனது மனைவியினை குடும்பத் தகராறு காரணமாக கழுத்து நெரித்து கொலை செய்தமை நிரூபணமாகியதனையடுத்து கொலைக் குற்றவாளியான சுரேசிற்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (எ-4)


## சைப்பிரஸ் Work Permits

ஆண், பெண் இருபாலருக்குமான வேலை வாய்ப்புக்கள்

* வீட்டு பணிப்பெண்கள்
* பண்ணை தொழிலாளர்கள்

மத்திய கிழக்கு நாடுகளுக்கு
ஆண், பெண் இருபாலருக்குமான வேலை வாய்ப்புக்கள்
கடன் வசதிகள் உண்டு

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உங்கள் சுயவிபரக்கோவையுடன் 8,9ம் திகதிகளில் 9a.m to 1p.m வரை யாழ்ப்பாணத்தில்

CITY INNS Hotel

56,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:077 007 1835

(5766)



## வவுனியா மற்றும் யாழ்.நகரில் மீண்டும் புதுப்பொலிவுடன் Diploma in Mass Media (அறிவிப்பாளர் பயிற்சி)

வானொலி தொலைக்காட்சி அறிவிப்பாளராக தயாரிப்பாளராக, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக வருவதற்கு ஆசைப்படுகிறீர்களா?

இதோ... காலம் : 3 மாதம்

Full Time / Part Time Course

வானொலி அறிவிப்பு, நிகழ்ச்சி தயாரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு, விளம்பர தயாரிப்பு, நேரடி வர்ணனை, செய்தி வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு இன்னும் பல. (பயிற்சி நிறைவுசெய்யும் மாணவர்களுக்கு 5 நாள் மழை FM வானொலியில் அறிவிப்பாளராக கடமையாற்ற சந்தர்ப்பம்!

எமது நிறுவனத்தில் அறிவிப்பாளர் பயிற்சியினை மேற்கொண்ட மாணவர்கள் அரச / தனியார் வானொலி, தொலைக்காட்சிகளில் அறிவிப்பாளராக கடமையாற்றுகின்றார்கள்.

அனைத்து வகுப்புக்களும் இம் மாதம் ஆரம்பம் 08/03/2014

தயாராகுங்கள் இலங்கையிலும் சர்வதேசத்திலும் துடிப்பு மிக்க ஒரு சிறந்த அறிவிப்பாளராக ஊடக வியலாளராக வேண்டுமா?

BTEC BRITISH TECHNOLOGY & ENGLISH COLLEGE

#21, Sirampiyadi Lane, Jaffna. Tel : 0217904468, Mob :0777444225

பதிவுகளுக்கு விரையுங்கள்....!

(C-6678)



## இரணைமடு திருவருள் மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில்



### பொதுக் கூட்டம் - 2014

மேற்படி கூட்டம் 09.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் தலைவர் S.N. செல்வராஜா தலைமையில் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அம்பாள் ஆலய உபயகாரர்கள், அங்கத்தவர்கள், தொண்டர்கள், அடியவர்கள் அனைவரையும் பொதுக் கூட்டத்தில் கலந்து அம்பாளின் ஆலய வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்
இரணைமடு திருவருள் மிகு
கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்,
கிளிநொச்சி

(C-6684)



## சமூகத் தொடர்பு சேவைகள்

CCS

தலைமைக் காரியாலயம் கொழும்பு PV96438

உங்கள் தொழில் தேவைகளையும் சேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ள

பிரித்தானிய சான்றிதழுக்கான தொடர்பாடலுடன் சுவடிய தலைமைத்துவத்திற்கான பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுகின்றது.

கட்டணம் ரூபா 4900/= பங்குபற்றுபவர்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பதிவிற்கு முந்துங்கள்.

பதிவுசெய்து கொள்ள நாடவேண்டிய இடம்:- 665,B ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக தகவல்களுக்கு:-

தொலைபேசி இல:-0772649990, 021 320 6865

மின்னஞ்சல்: info@communitycs.lk

இணையம்: www.communitycs.lk

(5762)



# Global Metro Campus

GMC

169,Main Street,Mallusanthy.
021-3200 500 / 0766-838 717 / 072-59 59 590

Branches :- *Uduppiddy *Point Pedro *Maruthankerny *Puloly

### Spoken English with Grammer

Duration:- 3 Months, 6 Months, 8 Months

ஆங்கிலம் பேச ஆர்வம் உள்ளவரா?
ஆங்கிலம் ஓரளவுக்கு தெரிந்தவரா?
பாடசாலைக் கல்வியை தமிழ் மொழியில் பயின்றவரா?
வேலை வாய்ப்பிற்காக காத்திருப்பவரா?
வெளிநாட்டில் வேலை பார்க்க விரும்புபவரா?

ஆங்கிலத்தில் பேசலாம் இலகுவாக....

Reading, Writing, Listening, Speaking

Start : [illegible]8.03.2014

### Certificate / Diploma Courses

**MS Office Packages**
- Windows
- Word [Documents]
- Excel [Spread Sheets]
- PowerPoint [Presentation]
- Access [Database]

Duration 3 Months

ஆரம்பம்:- 15.03.2014

### Auto Cad 2D & 3D

**Desktop Publishing**
- Pagemaker
- Equation Editor
- Corel Draw
- Photoshop

Skills Training For O/L,A/L,Diploma Students & Workers

### Spoken Sinhala

Duration:- 3 Months, 6 Months, 8 Months

சிங்களம் பேச ஆர்வம் உள்ளவரா?
சிங்களம் ஓரளவுக்கு தெரிந்தவரா?
பாடசாலைக்குச் செல்லும் மாணவரா?
வேலை வாய்ப்பிற்காக காத்திருப்பவரா?
வேலை பார்த்துக் கொண்டிருப்பவரா?

சிங்களத்தில் பேசலாம் இலகுவாக....

Reading, Writing, Listening, Speaking

Start : 08.03.2014

### e-Kids Learning

(சிறுவர்களுக்கான கணனிக் கல்வி)

குறைந்த கட்டணத்தில்...
சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படவுள்ளது.
மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமையினால்..
பதிவுகளுக்கு முந்துங்கள்

இலவசம் Bag,T-Shirt&Books

### Finearts
- Organ
- Music
- Octopad

### Sports
- Chess

(5761)



## We Need Talented people

மன்னார், வவுனியா, திருகோணமலை, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் O/L, A/L பயின்றவராயின் இன்றே இணையுங்கள்.



மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள்
வயதெல்லை 18-40. அனுபவம் அவசியமற்றது.

தொடர்பு:-0770771377

(5769)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.